
விலை: 50.00 viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 166 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 20 வெள்ளிக்கிழமை (03.06.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

eDUS
Learning made lovable
இலங்கையின் No.1 கல்வி
நிறுவனத்துடன் இணைந்திடுங்கள்...!
தரம் 1 - G.C.E A/L வரை
Professional Courses for Everyone
0777 123 330 (11705)

## வவுனியாவில் குளத்தில் நீராடச் சென்ற நால்வரில் இருவர் சடலங்களாக மீட்பு





### இருவரை காப்பாற்றிய வளர்ப்பு நாய்

(வவுனியா)

வவுனியாவில் மூன்று சிறுவர்கள் உட்பட நால்வர் நீராடச் சென்ற நிலையில் இரு சிறுவர்கள் சடலங்களாக மீட்கப்பட்டதோடு மற்றைய இருவரையும் அவர்களது வளர்ப்பு நாய் காப் 15

## துருக்கி நாட்டின் பெயர் 'துருக்கியே' என மாற்றம்

(அங்காரா)

துருக்கி தமது நாட்டின் பெயரை "துருக்கியே" என மாற்றியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை இதனை அங்கீகரித்து உறுதிப்படுத்தியுள்ளது.

பெரும்பாலான 15

## நெடுந்தீவுக் கடலில் மிதந்த 35 பூச்சிக்கொல்லி மருந்துப் போத்தல்கள்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக் கடலில் மிதந்து வந்த மர்மப் பொதியிலிருந்து 35 பூச்சிக்கொல்லி மருந்துப் போத்தல்கள் நேற்று வியாழக்கிழமை மீட்கப்பட்டுள்ளன.

நெடுந்தீவுக் கடலில் மர்மப் பொதி ஒன்று மிதப்பதாக கடற்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் கடற்படையினர் குறித்த பொதியினை மீட்டு சோதனையிட்டபோது அவற்றிலிருந்து 15

## தொலைநோக்குடைய தலைவர் இலங்கைக்கு கிடைக்கவில்லை

### பொருளாதார நெருக்கடி தொடர்பில் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம்



(ஒஸ்லோ)

தொலைநோக்குடன்கூடிய தலைமைத்துவத்தை வழங்கக்கூடிய தலைவர்கள் இலங்கைக்கு கிடைக்கவில்லை என நோர்வேயின் இலங்கைக்கான முன்னாள் விசேட சமாதானப் பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில்

### எதிர்வரும் செவ்வாய் பிரதமர் உரை

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் விசேட உரை ஒன்றை நிகழ்த்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று நடைபெற்ற பாராளுமன்ற விவகாரக் குழு கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே பாராளுமன்ற உறுப்பினர் 15

## இலங்கைக்கு இவ்வருடம் 6 பில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவை

### பிரதமர் ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

இந்த ஆண்டு கடன்களை மீள செலுத்துவதற்கும் வெளிநாட்டு ஒதுக்கத்துக்காகவும் 6 15

## நாட்டின் பேராபத்து தொடர்பில் 2020ஆம் ஆண்டே எச்சரித்தேன்

### சுட்டிக்காட்டியும் நடவடிக்கை இல்லை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



(கொழும்பு)

"இன்று நாடு வீழ்ச்சியடைந்து கடும் நெருக்கடியில் சிக்கியுள்ளது. இந்த அழிவு ஏற்படும் என நான் கடந்த 2020ஆம் ஆண்டு ஜனவரியில் இருந்தே நாட்டுக்கு வெளிப்படுத்தினேன்."

இவ்வாறு எதிர்க்கட்சித் தலை 15

## திணைக்களமல்லாத உத்தியோகத்தர்கள்

### சுயவிருப்பில் ஓய்வுபெறலாம்! விரைவில் சுற்றுநிருபம்

(கொழும்பு)

திணைக்களமல்லாத அரச உத்தியோகத்தர்கள் சுயவிருப்பின் அடிப்படையில் ஓய்வினை அறிவிக்கலாம் என்ற சுற்றுநிருபம் விரைவில் வெளியாகவுள்ளதாக தகவல் தெரிவிக்கின்றன. 15

## வெள்ளிக்கிழமை தொழில் திணைக்களம் மூடப்படும்

### செலவைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

(07ஆம் பக்கம் பார்க்க)

## அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் தொடர்பில்

### நீதி அமைச்சர் விஜயதாஸவுடன் அமெரிக்கத் தூதுவர் கலந்துரையாடல்



(கொழும்பு)

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜ 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்காத நிலையில் உள்ள
அனைத்துவிதமான
தொலைபேசிகளும்
கொள்முதல் செய்யப்படும்.

**A.R.K MOBILE SHOP**

No.62, Hospital Road,
Jaffna.
(மரக்கறிச் சந்தைக்கு முன்பாக)
(C-4419)

## குருநகரில் பலருக்கு விசர் நாய் கழித்துள்ளது

குருநகர் பகுதியில் நேற்றைய தினம் பலருக்கு விசர் நாய் ஒன்று கடித்துள்ளது. பல இடங்களில் அலைந்து திரிந்து எதிர்பாராத நிலைமையில் பலருக்கு கடித்துள்ளது.

விசர் நாய் தடுப்பூசி தட்டுப்பாடான இந்நிலைமையில் கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்த வேண்டியது யாழ். மாநகர சபையின் கடமையாகும். இந்நிலையில் கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்தாது பாராமுகமாக இருப்பதையிட்டு பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும் பலருக்கு இந்நிலைமை ஏற்படாது விசர் நாய் கடியிலிருந்து காப்பாற்றுமாறு உரிய அதிகாரிகளுக்கு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-106)

## பதவி வெற்றிடம்

| | |
|---|---|
| பதவி | : அலுவலக உதவியாளர் - பெண் |
| வேலை நேரம் | : காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை |
| வயதெல்லை | : 25 இற்கு மேல் |
| சம்பளம் | : 17,500/= |
| தகைமை | : ஓரளவு ஆங்கில அறிவு |
| நேர்முகத் தேர்வு | : 04.06.2022 காலை 9 - பிற்பகல் 1 |

(11722)

**Airtech Weighing Machines** (நிறுவை இயந்திர அலுவலகம்)

No.57, Sir.Ponnambalam Ramanathan Road, Jaffna.
021 221 6092, 071 762 2719 சுகுமாறன்

## Pearson International College

**Applications are called for IELTS tutors**

- Candidates should have minimum HND in English or anu other undergraduate in English medium
- Previous IELTS score above or equal to 6.5 is recommended (not mandatory)
- Prior teaching experience would be an added advantage
- Should be able to work during week days

Email your CV within three days of this advertisement to pearsoncollege2020@gamil.com

Call +94 74 188 7878 for more info

(11704)

No.21, 3rd Lane, Power house Road, Jaffna.

### பாராளுமன்ற உறுப்பினர் திலிப் வெதஆராச்சியின்

# மகன், மருமகளை கைது செய்ய நடவடிக்கை

### பொலிஸாருடன் முரண்பட்டதாக தெரிவிப்பு

(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் பெலியத்த - பெதிகம நுழைவாயில் பகுதியில் பொலிஸ் அதிகாரிகள் சிலருடன் முரண்பட்டதாக கூறப்படும் அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திலிப் வெதஆராச்சியின் மகனான ரவிந்து வெதஆராச்சி மற்றும் அவரது மனைவி ஆகியோரை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அவர்களை கைது செய்வதற்காக வீரகெட்டிய பகுதியில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர் திலிப் வெதஆராச்சியின் வீட்டுக்கு பொலிஸார் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், ரவிந்து மற்றும் அவருடைய மனைவி குறித்த வீட்டில் இருக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்த குறித்த இருவருக்கும் எதிராக அந்த நேரத்தில் கடமையில் இருந்த பொலிஸ் அதிகாரிகள் சட்டநடவடிக்கை எடுக்காமை தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், இச்சம்பவம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் திலிப் வெதஆராச்சியின் மகனான ரவிந்து வெதஆராச்சி தனது முகப்புத்தக பக்கத்தில் பதிவொன்றையிட்டுள்ளார்.

அதில், சம்பவத்தின் போது கடமையில் இருந்த பொலிஸ் அதிகாரிகள் தம்மை தாக்க முற்பட்டதாக தெரிவித்துள்ளார். (ம)

## அரசியலமைப்...

பக்ஷவுக்கும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றையதினம் நடைபெற்றது.

இதன்போது அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தச்சட்டமூலம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

பாராளுமன்றில் 21ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படவுள்ள நிலையில் அமெரிக்கத் தூதுவர் இது தொடர்பில் கலந்துரையாடியுள்ளார். (ம)

## பொருளியற் கல்லூரி | BARATHY

நாவலர் வீதி, யாழ்ப்பாணம். | கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். | சித்தன்கேணி

எமது மூன்று நிறுவனங்களிலும்

**A/L 2024 கலை, வர்த்தகப் பிரிவுகள்**

ஆரம்பம்
11.06.2022 சனிக்கிழமை

எமது மூன்று நிறுவனங்களிலும் நாளையிலிருந்து (04.06.2022) உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

அனுமதி பெறுவதற்கான அலுவலக நேரம்

| | | |
|---|---|---|
| தினமும் | யாழ். நகர் | 8.00 a.m - 12.00 p.m |
| | சுன்னாகம் | 3.30 p.m - 5.30 p.m |
| | சித்தன்கேணி | 3.30 p.m - 5.30 p.m |

மேலதிக விபரங்களுக்கு **077 376 3511**

(C-4423)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
21 . 03 . 1947

உதிர்வு
15 . 05 . 2021

அமரர்

**துரைச்சாமி இராசம்மா**

திதி : 03.06.2022

ஆண்டு ஒன்று ஆனதம்மா
நீங்கள் என்னை விட்டு பிரிந்து சென்று.
ஆனாலும் என் மனமோ இன்னும் ஆறவில்லை - அம்மா
நேற்றுப் போல் இருக்குதம்மா
நினைவுகள் தோற்றுப்போய் நான்
அழுத பொழுதுகள் காலங்கள் பல
கடந்தாலும் என்றும் என் மனதில்
காவியமாய் இருப்பீர்கள் அம்மா.
நீங்கள் சென்ற தேசமதில் நிலையான
அமைதிகொள்ள வேண்டுகிறேன் அம்மா.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(11712)

பாரதி வீதி,
பத்தமேனி, அச்சுவேலி.

076 547 7722

அன்பு மகன் உதயன்

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் கணித பாட ஆசிரியை
திருமதி **அனிற்ரா அலன்பாக்றோச்**
அவர்களின் அன்புக் கணவர்

**அமரர் சுவாம்பிள்ளை**
**அலன்பாக்றோச்**

அவர்களின் மறைவினால்
துயரடைகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை**

(11724)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 04.05.2022 புதன்கிழமை சிவபதமடைந்த

அமரர் திருமதி **நேசமலர்**
**ஆனந்தராஜா**

அவர்களின்

அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 01.06.2022 புதன்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. இன்று (03.06.2022) வெள்ளிக் கிழமை முற்பகல் 9.00 மணியளவில் சோடாக்கொம்பனி ஒழுங்கை மல்லாகத்திலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய திருமண மண்டபத்தில் இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சோடாக் கொம்பனி ஒழுங்கை,
மல்லாகம்.

(C-4421)

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் அதிகரிக்கும் உணவு நெருக்கடி

# ஆபத்தின் விளிம்பில் இலங்கை

## தாமதிக்காது விவசாயத்தில் ஈடுபடுங்கள்

(கொழும்பு)

**உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான யுத்தம் எதிர்காலத்தில் உலக உணவுப் பற்றாக்குறைக்கு வழிவகுக்கும் என நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.**

அதற்கமைய, அந்நியச் செலாவணி இல்லாத இலங்கை உட்பட ஏனைய நாடுகளில் உணவுப் பொருட்களின் விலை உயர்வினால் கடும் நெருக்கடியை எதிர்நோக்க நேரிடும் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் இந்திரஜித் அப்போன்சோ தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையில் இலங்கையின் பொருளாதாரம் முழுமையாக உடைந்து விழும் நிலைமை காணப்படுகின்றது.

இந்த நிலையில் அடுத்தவர் மீது குற்றம் சுமத்தி நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்காமல் உடனடியாக நடவடிக்கை ஒன்றை எடுக்க வேண்டும்.

இதற்கு முகங்கொடுக்கும் வகையில் மக்களை விவசாயம் செய்யுமாறு வழிகாட்ட வேண்டும் என கொழும்பு பல்கலைக் கழகத்தின் பொருளாதாரப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் இந்திரஜித் அப்போன்சோ குறிப்பிட்டுள்ளார். (நி-6)

## யூரியா வழங்க உலக வங்கி இணக்கம்

(கொழும்பு)

பெரும்போக பயிர்ச்செய்கைக்குத் தேவையான யூரியா பசளையை வழங்க உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

பல்வேறு நாடுகள் மற்றும் அமைப்புகளிடம் அது தொடர்பான கலந்துரையாடல்கள் மற்றும் வேண்டுகோள்கள் ஊடாக விவசாயிகளுக்குத் தேவையான பசளையை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளில் அமைச்சர் மகிந்த அமரவீர கடுமையான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

அதன் ஒருகட்டமாக அமைச்சர் மகிந்த அமரவீர மற்றும் உலக வங்கியின் பிரதிநிதிகள் குழுவொன்றுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது விவசாயிகளுக்கு சாதகமான பதில் கிடைத்துள்ளது.

அதன்படி எதிர்வரும் பெரும்போக பயிர்ச் செய்கைக்குத் தேவையான யூரியா உரத்தை இலங்கைக்குப் பெற்றுக்கொடுக்க உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

### சாதாரண தரப் பரீட்சை

## விடைத்தாள் திருத்தப்பணிகள் 17 ஆம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் முதற்கட்ட விடைத்தாள் திருத்தப் பணிகள் எதிர்வரும் 17 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், இரண்டாம் கட்ட விடைத்தாள் திருத்தப்பணிகள் எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 9 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

## ஜனாதிபதி வீட்டிற்கு செல்ல வேண்டும் மீண்டும் தெளிவுபடுத்திய ஆர்ப்பாட்டக்காரர்கள்




(கொழும்பு)


ஜனாதிபதியை தாங்கள் சந்தித்ததாக வெளியான தகவல்களை கோட்டா கோ கம ஆர்ப்பாட்டக்காரர்கள் மறுத்துள்ளனர்.

காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக் காரர்களை பிரதிநிதித்துவம் செய்வதாக தெரிவித்து இரண்டு பௌத்த மதகுருமார் ஜனாதிபதியை சந்தித்துள்ளதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி வீட்டிற்கு செல்ல வேண்டும் என்பதே எங்களது முக்கிய வேண்டுகோள் என ஆர்ப்பாட்டக்காரர்கள் குழுவைச் சேர்ந்த ரண்டிமல் கம கே தெரிவித்துள்ளார்.

காலிமுகத்திடல் போராட்டத்தினை சிதைக்கும் நோக்கத்துடன் பொய்யான தகவல்கள் பரப்பப்படுகின்றன என அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

## உயர்தர, ஐந்தாம் தர பரீட்சைகளை ஒக்டோபர் மாதத்தில் நடத்த திட்டம்



(கொழும்பு)

ஓகஸ்ட் மாதத்தில் நடைபெறவிருந்த கல்வி பொதுத்தராதர உயர்தர மற்றும் 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை ஆகியனவற்றை எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (நி-6)

## ஈழத்தமிழ் அகதிகளை விடுதலை செய்யுங்கள்

### அன்புமணி வலியுறுத்தல்



(சென்னை)

திருச்சி மத்திய சிறை சிறப்பு முகாமில் வாடும் ஈழத்தமிழ் அகதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று தமிழக அரசுக்கு பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் நேற்று முன்தினம் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அதில், திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழ் அகதிகள் தங்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி 13 ஆவது நாளாக உண்ணாவிரதம் மேற்கொண்டு வருகின்றனர்.

அவர்களில் 3 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிறப்பு முகாம் அகதிகள் மீது எந்தக் குற்றச்சாட்டும் இல்லை, எந்த வழக்கும் நிலுவையில் இல்லை. விடுதலை செய்தால் தாய் நாட்டுக்குச் சென்று சொந்தங்களுடன் வாழவே அவர்கள் விரும்புகின்றனர்.

அவர்களை காரணமே இல்லாமல் சிறப்பு முகாம்களில் அடைத்து வைப்பது மனித உரிமை மீறல் ஆகும். சிறப்பு முகாம் என்பது முகாம் அல்ல, அது சிறையை விடக் கொடுமையானது. மனிதர்கள் வாழத்தகுதியற்ற இடம் ஆகும்.

கடந்த காலங்களில் பல முறை அவர்கள் போராடிய போது விரைவில் விடுதலை செய்வதாக வாக்குறுதி அளித்த தமிழக அரசு இன்று வரை விடுதலை செய்யவில்லை.

தமிழ் நாட்டில் ஈழத்தமிழர் நலனுக்காக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளார். சிறப்பு முகாம் அகதிகளும் ஈழத்தமிழர்கள் தான்.

காலவரையறையின்றி அவர்களை அடைத்து வைப்பது நியாயமல்ல. அவர்களை உடனடியாக விடுதலை செய்ய முதலமைச்சர் ஆணையிட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணம்

## ஹாட்லியையிற்ஸ் 2 ஆவது சுற்றுக்குத் தகுதி



கே.சி.சி.சி. விளையாட்டுக் க்கழகம் வருடா வருடம் நடத்தும் 30 பந்து பரிமாற்றல்களைக் கொண்ட தொடரின் முதல் சுற்றில் 5 ஆவது போட்டி விங்ஸ் அணிக்கும் ஹாட்லியையிற்ஸ் அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் ஹாட்லியையிற்ஸ் அணி, விங்ஸ் அணியை 3 விக்கெட்டுகளால் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய விங்ஸ் அணி 24 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் ஜெரூஸன்-14, மைக்கல்-15, ரைரோன் ஆட்டமிழக்காது 16 ஓட்டங்களை எடுத்தனர். பந்து வீச்சில் ஹாட்லியையிற்ஸ் அணி சார்பாக மணிமாறன், செயோக், பிரசாத்தலா -02 விக்கெட்டுகளையும் கிரிதரன்-01 விக்கெட்டையும் கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஹாட்லியையிற்ஸ் அணி 24.2 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 112 ஓட்டங்களைப் பெற்று வெற்றியை உறுதி செய்தனர்.

துடுப்பாட்டத்தில் பிரசாத்-54 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் விங்ஸ் அணி சார்பாக கிரிசன்-03, அரசன்-02 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். இந்த வெற்றியின் மூலம் ஹாட்லியையிற்ஸ் அணி கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணப் பட்டியலில் இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றது. (4)

## உலகக்கிண்ண தகுதி போட்டி

# இறுதிப் போட்டிக்குள் உக்ரைன் அணி



ஸ்கொட்லாந்து அணிக்கெதிரான 2022 கால் பந்து உலகக்கிண்ண ஐரோப்பிய தகுதிப் போட்டியில், உக்ரைன் அணி 3-1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது.

ஹாம்ப்டன் பார்க் விளையாட்டரங்களில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற பிளே-ஓஃப் அரையிறுதிப் போட்டியில், உக்ரைன் அணியும் ஸ்கொட்லாந்து அணியும் பலப்பரீட்சை நடத்தின.

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியில், உக்ரைன் அணி 3-1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இதில் உக்ரைன் அணி சார்பில், ஆண்ட்ரி யார் மோலென்கோ 33 ஆவது நிமிடத்தில் ஒரு கோலும், ரோமன் யாரேம்சுக் 49 ஆவது நிமிடத்தில் ஒரு கோலும், ஆர்டெம் டோவ்பிக் 95 ஆவது நிமிடத்தில் ஒரு கோலும் அடித்தனர்.


ஸ்கொட்லாந்து அணி சார்பில், கால்ம் மெக்ரிகர் 79 ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார்.

ஏற்கனவே போர்த்துக்கல் மற்றும் போலந்து அணிகள் கால்பந்து உலகக்கிண்ணத் தொடருக்கு தகுதி பெற்றுள்ள நிலையில், நாளை மறுதினம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள கால் பந்து உலகக்கிண்ண தகுதிப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில், உக்ரைன் அணி, வேல்ஸ் அணியை எதிர்கொள்ளவுள்ளது. (4-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2629

### சிவரமி

நான் மேய்ந்த மேய்ச்சல் நிலத்தை பசு கடைசியாக ஒரு முறை பார்வையிடுவதே...



புதுமனை புதுவிழா என்கிறோம்


### ரிசாந்



முடிவு எடுக்கும் வரை காத்திரு முடிவு எடுத்த பின் காத்திருக்காதே

### மாதுஜன்

பிறருக்காக இரக்கப்படுவதில் தவறில்லை ஆனால் நாம் ஆடாய் இருக்கும் பட்சத்தில் நரிகளுக்காக வருந்துவது என்பது முட்டாள்தனமே



### அஜிதா

பொறுமையாக இருக்க தான் தைரியம் வேண்டும்




மத்தபடி கோபம் நாய்க்கு கூட வரும்

### வனஜா

மரணத்தை விட கொடியது உயிராய் நேசித்தவர்களின் நிராகரிப்பும்... அலட்சியமும்... தவறான புரிதலும்!!!

### நிலா

பகல் முழுவதும் நடுரோட்டில் படுத்து தூங்க வேண்டியது



ராத்திரியில் குரைத்துக்கொண்டே ஒருவரையும் தூங்கவிடாமல் செய்வது

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சீனா வழங்கும் மருந்துகள் இன்று நாட்டை வந்தடையும்

(கொழும்பு)

பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ள இலங்கைக்கு உலகின் பல நாடுகளும் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்து வரும் நிலையில் தற்போது சீனாவின் நன்கொடையின் கீழ் வழங்கப்படும் மருந்துகளின் முதல் தொகுதி இன்று இலங்கைக்கு வரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

இது குறித்து கொழும்பில் உள்ள சீன தூதரகம் தெரிவிக்கையில்,

10 மில்லியன் சீன பணப் பெறுமதியான 512,640 உயிர் காக்கும் எனோக்ஸாபரின் சோடியம் ஊசி மருந்துகள் இலங்கைக்கு மானியமாக வழங்கப்பட்டுள்ளன.


உயிர் காக்கும் எனோக்ஸாபரின் சோடியம் ஊசியின் 512,640 ஊசிகளில் 256,320 சிரிஞ்சுகள் இன்று நள்ளிரவில் முதல் சரக்குக் கப்பலில் வந்து சேரும்" என்று தூதரகம் தெரிவித்துள்ளது.

அத்தோடு இலங்கைக்கான சீனாவின் 500 மில்லியன் சீனப் பணப் பெறுமதியிலான மானியத்தின் ஒரு பகுதியே இந்த மருந்துப் பொருட்களின் முதல் தொகுதி என சீனத் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், சீனாவில் இருந்து மருந்துகள் இரண்டு சரக்குக் கப்பல்கள் மூலம் விநியோகிக்கப்படும்" என்று தூதரகம் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 14 . 08 . 1945



மறைவு 04 . 05 . 2022

கடந்த 04.05.2022 புதன்கிழமை அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர்.நாகமுத்து இரத்தினசிங்கம்

அவர்களின் 31 ஆம் நாள் நிகழ்வானது இன்று (03.06.2022) வெள்ளிக் கிழமை அன்னாரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் இடம்பெறும். இந் நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்பாக கேட்டுக் கொள்கின்றோம்.

அன்னாரது மறைவுச் செய்தி அறிந்து பல வழிகளிலும் உதவிபுரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(11706)

சுழிபுரம் மேற்கு, சுழிபுரம். குடும்பத்தினர்.

சர்வதேச நாணய நிதியத்திடம்

# 3 பில்லியன் டொலர்களை கோரும் இலங்கை

(கொழும்பு)

இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து ஈஎவ்எவ் வழிமுறை மூலம் 3 பில்லியன் அமெரிக்க டொலர்களை பெறுவதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளது என விடயமறிந்த வட்டாரங்கள் வெளிநாட்டு ஊடகம் ஒன்றிற்கு தெரிவித்துள்ளன.

சர்வதேச நாணய நிதியத்துடன் மற்றுமொரு சுற்றுப்பேச்சுவார்த்தையை இம்மாத ஆரம்பத்தில் முன்னெடுப்பதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது எனவும் இந்த மாத இறுதிக்குள் உடன்பாடொன்றிற்கு வருவதற்கு அரசாங்கம் விரும்புகின்றது எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

1948 ஆம் ஆண்டு சுதந்திரத்தின் பின்னர் தான் சந்தித்துள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான மீட்பு திட்டமொன்றிற்கு இலங்கை வேண்டுகோள் விடுத்துள்ளது.

வெளிநாடுகளிற்கு செலுத்தவேண்டிய கடன்களை திருப்பிசெலுத்த முடியாமல் வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்ட இலங்கை உணவு, மருந்து போன்ற அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிக்கான கட்டணங்களைச் செலுத்த முடியாமல் நெருக்கடியில் சிக்குண்டுள்ளது.

இலங்கைக்கான 17 ஆவது திட்டமாக அமையக்கூடிய ஈஎவ்எவ் திட்டத்தின் கீழ் நிதி உதவியை இலங்கை பெற வேண்டும் என்றால் நாடு ஆழமான அடிப்படை பலவீனங்களை சரிசெய்வதற்கு கட்டமைப்பு மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும்.

இந்தத் திட்டம் சாதாரணமாக மூன்றரை மாதங்கள் நீடிக்கும். இந்த திட்டத்திற்கு அங்கீகாரம் கிடைத்ததும், நான்கரை வருடங்களில் கடன்களை திருப்பிச் செலுத்த வேண்டும்.

இலங்கையுடன் முழுமையான சீர்திருத்த பொதி குறித்த பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளதாக கடந்த வாரம் தெரிவித்திருந்த போதிலும் எவ்வகையான திட்டம் குறித்து பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன என்பது குறித்து எதனையும் தெரிவிக்கவில்லை. (நி-6)

## பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 12.06.2022 (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 10.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எனவே சகல பழைய மாணவர்களும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

(சி-4418)

திருமதி.இ.முத்துக்குமாரன்.(அதிபர்)
தலைவர் , பழைய மாணவர் சங்கம்
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

# இராசிபலன்

03.06.2022
வைகாசி 20, வெள்ளிக்கிழமை
சதுர்த்தி பின்னிரவு 12.40 மணிவரை

புநர்பூசம் பிற்பகல் 5.35 மணிவரை
சுபநேரம் -5.52 -7.22 மணிவரை
இராகுகாலம் -10.22-11.52 மணிவரை

சதுர்த்தி விரதம்,
சந்திராஷ்டமம்-கேட்டை, மூலம்

வளவன்

**மேஷம்** மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், சுபவிரயங்கள் மேலோங்கும் நாள்.

**ரிஷபம்** உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்,உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்துசேரலாம், வழிபாடு மகத்துவம் தரும்.

**மிதுனம்** கணபதி வழிபாடு காரிய வெற்றி தரும், நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கடகம்** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முற்படுவீர்கள், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிம்மம்** தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் எண்ணம் உருவாகும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**கன்னி** தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியத்தில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், போசன நன்மையுண்டு.

**விருச்சிகம்** கடந்த சில தினங்களாக தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு** காரிய வெற்றிக்கு கணபதியை வழிபட வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், குடும்பப் பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறைகூறலாம்.

**மகரம்** விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**கும்பம்** நம்பிக்கைகள் நடைபெற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், ஆரோக்கியமான நாள்.

**மீனம்** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்,வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும்.

உலகிலுள்ள ஒவ்வொரு தீமைக்கும் ஒரு தீர்வுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மர்மமான முறையில் காணாமல்போன 3 வயது குழந்தை பாதுகாப்பாக மீட்பு

## பொலிஸ் விசாரணை தீவிரம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மிருசுவில் வடக்கு பகுதியில் நேற்று முன்தினம் காணாமல் போன நிலையில் மீட்கப்பட்ட 3 வயது குழந்தை சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மிருசுவில் வடக்கு பகுதியைச் சேர்ந்த 3 வயதான கபிலன் பவிசா என்ற மூன்று வயதுக் குழந்தை நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை 5.30 மணியளவில் தனது வீட்டில் சகோதரனுடன் விளையாடிக்கொண்டிருந்த வேளை மர்மமான முறையில் காணாமல் போயிருந்தார்.

இந்நிலையில் பிரதேச மக்கள், பாதுகாப்பு தரப்பினர் இணைந்து நடத்திய தேடுதலில் 5 கிலோமீற்றர் தொலைவில் உள்ள அயல் கிராமமான வரணி மாசேரி காட்டுப்பகுதியில் அமைந்துள்ள ஆலயம் ஒன்றில் இருந்து இரவு 10 மணியளவில் பாதுகாப்பாக மீட்கப்பட்டார்.

மீட்கப்பட்ட குழந்தையின் உடலில் சிறு கீறல் காயங்கள், முள் குத்திய காயங்கள் காணப்பட்ட நிலையில் குழந்தை சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இருப்பினும் அக் குழந்தை தனது வீட்டில் இருந்து ஆலயத்திற்கு எவ்வாறு சென்றது என்பது இதுவரை தெரியவரவில்லை.

வயல் பகுதி ஊடாக குழந்தை நடந்து சென்ற கால்தடம் காணப்பட்டதாக தேடுதல் மேற்கொண்டவர்கள் தெரிவித்தனர். அப்பகுதியில் இனம்தெரியாத நபர் ஒருவர் நடமாடியதை கண்ட அப்பகுதி மக்கள் குறித்த நபரை பிடித்து கொடிகாமம் பொலிஸில் ஒப்படைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-30-60)

# மோ.சைக்கிள் விபத்து இருவர் படுகாயம்



(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பருத்தித்துறை வீதியில் நேற்று வியாழக்கிழமை மதியம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

வேகக்கட்டுப்பாட்டினை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியோரம் காணப்பட்ட கம்பத்துடன் மோதியதிலேயே இரு இளைஞர்களும் படுகாயமடைந்துள்ளனர்.

இதில் மீசாலை வடக்கு கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 18 மற்றும் 20 வயதான இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக மந்திகை மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தில் 2020 / 2021 ஆம் கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப் படுத்தும் நிகழ்வு நேற்று முன்தினம் 1 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்றது. (படம்:-சிவசாந்தன்)

# இணையவழிக் கலந்துரையாடல்

(குப்பிழான்)

உரிமைக் குழுமத்தின் ஏற்பாட்டில் நாட்டின் சமகால நிலைமைகள் தொடர்பில் ஆராயும் இணையவழிக் கலந்துரையாடல் நிகழ்வு நாளை சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பேராசிரியர் ச.விஜேசந்திரன் "சர்வதேச நாணய நிதியங்கள் இலங்கையை மீட்டெடுக்குமா?" எனும் தலைப்பிலும், ஓய்வுநிலை மூத்த நிர்வாக அதிகாரியும், பொருளாதார, சமூக ஆய்வாளருமான ம.இ.செல்வின் "கோட்பாடுகளுக்கும் அப்பால் இலங்கையை மீட்டெடுப்பதற்கான முயற்சிகளை எங்கிருந்து ஆரம்பிப்பது?" எனும் தலைப்பிலும் கருத்துரைகள் நிகழ்த்தவுள்ளனர்.

குறித்த கலந்துரையாடலில் கலந்து கொள்ள விரும்பும் ஆர்வலர்கள் Meeting ID: 652 9351 8964, Passcode: Webinar@02 ஊடாக இணைந்து கொள்ள முடியும் என நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (4-6-18)



சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக ஒழுங்குபடுத்தலில் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தின் நிதிப் பங்களிப்பில் மேற்படி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பொருளாதாரத்தால் நலிவடைந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் சிறுவர்களை அதிகமாகக் கொண்ட கூலித் தொழிலாளர்களைச் சேர்ந்த 45 குடும்பங்களுக்கு இரண்டரை இலட்சம் ரூபாய் பெறுமதியான அத்தியாவசிய உலர் உணவுப் பொருட்கள் •கடந்த செவ்வாய்க் கிழமை வழங்கப்பட்டன. (படம்:-ரவிசாந்)

# நல்லை ஆதீனத்தில் இன்று பண்ணிசைக் கச்சேரி

(குப்பிழான்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் முன்னெடுக்கும் தெய்வீகத் திருக்கூட்டம் தொடர் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணி முதல் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவர் கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், கோப்பாய் சுப்பிரமுனிய கோட்ட முதல்வர் ஆன்மி கச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தின் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் சுவாமி குணாதிதானந்த சரஸ்வதி ஆகியோர் திருமுன்னிலை வகிக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக அமெரிக்காவின் இளம் தொழிலதிபரும், ஹவாய் சைவ ஆதீன அடியவருமான ஜோதி பரமின் பண்ணிசைக் கச்சேரி நிகழ்வு நடைபெறும். (4-6-18)

# கோண்டாவில் சிவகாமி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோண்டாவில் ஈழத்து தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து பன்னிரெண்டு தினங்கள் இடம்பெறவுள்ள இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்த திருவிழாவும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (4-6)




யாழ்.மாவட்டத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கிய 275 குடும்பங்களுக்கு 3 லட்சம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருள் வழங்கும் நிகழ்வு பூமணி அம்மா அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி நா.தனேந்திரன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

# சிறுகதை அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

எங்கட புத்தகங்களின் மூன்றாவது வெளியீடான எழுத்தாளர் ஆசி கந்தராஜாவின் "பணச் சடங்கு", சிறுகதைத் தொகுப்பின் அறிமுகமும் எழுத்தாளர் ஆசி கந்தராஜாவுடனான கலந்துரையாடலும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் நண்பகல் 12 மணி வரை யாழ்.பொதுசன நூலக குவிமாடக்கூடத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் கவிஞர் சோ.பத்மநாதனின் அறிமுக உரையும், தொடர்ந்து எழுத்தாளர் ஆசி கந்தராஜாவின் உரையும் இடம்பெறும். உரைகளின் தொடர்ச்சியாக கலந்துரையாடல் இடம்பெறும். (4-6-33)

# கோஷ்டி மோதல் ஐவர் படுகாயம்

(கரணவாய்)

பருத்தித்துறை சுப்பர் மடம் பகுதியில் இடம்பெற்ற கோஷ்டி மோதல் சம்பவத்தில் படுகாயமடைந்த 5 பேர் பருத்தித்துறை ஆதார மருத்துவனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.


கடற்றொழிலில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே இம் மோதல் ஏற்பட்டதாகவும் இதில் வாள், கொட்டன்கள் கொண்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (4-6-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நாணய நிதியத்திற்கு சென்று மீண்டெழுந்த நாடுகள் உலகில் இல்லை

## பிமல் ரத்நாயக்க



(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்திற்கு சென்று, நாட்டை ஒரு போதும் மீட்டெடுக்க முடியாது என்று ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், கிறீஸ் நாட்டுக்கு ஏற்பட்ட நிலைமை இலங்கைக்கும் ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜே.வி.பியின் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், சர்வதேச நாணய நிதியத்திற்கு சென்று, மீண்டெழுந்த நாடுகள் உலகில் இல்லை.

1998 இல் இருந்து ஆர்ஜன்டீனா 9 தடவைகள் ஐ.எம்.எப்பிடம் கடன் பெற்றுள்ளது. இந்த 9 தடவைகளும் அந்நாடு கடுமையான நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தது.

சர்வதேச நாணய நிதியத்திற்கு சென்று இலங்கை போன்ற சிறிய நாடுகளால் ஒருபோதும் மேலே வரமுடியாது.

கிறீஸ் எம்மை விட பல மடங்கு பெரிய நாடாகும். 13 வருடாங்கள் ஐ.எம்.எப்பிற்கு சென்று, கடந்த வருடம் தான் அந்த நாட்டில் சிறியதொரு முன்னேற்றம் ஏற்பட்டது.


ஆனால், இந்தக் காலப்பகுதியில் நாட்டின் மின்சாரக் கட்டமைப்பு, நீர் சுத்திகரிப்பு நிறுவனங்கள், துறைமுகங்கள் என அனைத்தையும் கிறீஸ் விற்பனை செய்தது.

இதேபோன்று தான் இலங்கையிலும் ஏற்படும்.

இப்போதுள்ள ஆட்சியாளர்கள் இன்னும் இருந்தால் தனிநபர் கடன் தொகை இன்னமும் உயரும். கிறீஸ் நாட்டைப் போன்று, நாட்டின் ஏனைய சொத்துக்களையும் விற்பனை செய்யும் நிலைமை ஏற்படும்.

தனிநபர் வருமானத்தை விட தனிநபர் கடன்தொகை இன்று அதிகரித்துள்ளது. கோட்டா-ரணில்- ஹரின் போன்றோரை வைத்து நாட்டில் எதையும் செய்ய முடியாது. இவர்களால் மக்களை மீட்டெடுக்க முடியாது எனத் தெரிவித்தார். (நி-6)

# அருணி விஜேவர்த்தன-ஜூலிசுங் சந்திப்பு



(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

அந்த பதிவில், இலங்கையின் ஜனநாயக மற்றும் வளமான எதிர்காலத்தை பாதுகாக்குமாறு இலங்கை மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதற்காக அமெரிக்கா எவ்வாறு இலங்கைக்கு உதவ முடியும் என்பது தொடர்பில் குறித்த சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டது என அவர் தனது பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-6)

# திருமலையில் நிலக்கடலை அறுவடை



(திருமலை)

திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பாலம்போட்டாறு- பத்தினிபுர கிராமத்தில் நிலக்கடலை அறுவடை நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

குறித்த அறுவடை நிகழ்வை தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஆரம்பித்து வைத்தார்.

சௌபாக்யா உற்பத்திக் கிராமம் மூலமாக தெரிவு செய்யப்பட்டு சௌபாக்யா சங்கம் மூலமாக நிலக்கடலை, நிலக்கடலை அல்வா போன்ற உற்பத்தி பொருட்களும் இதன்போது சந்தைப்படுத்துவதற்காக பகிர்ந்தளிக்கப்பட்டன.

தற்போதைய நெருக்கடிக்கு மத்தியில் ஒவ்வொருவரும் தங்களது வீடுகளில் வீட்டுத்தோட்ட பயிர்ச் செய்கையில் ஈடுபட வேண்டும். உணவுப் பற்றாக்குறை இல்லாதளவுக்கு ஒரு அங்குலமேனும் மரவள்ளி தடியையாவது நட வேண்டும் என பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி இதன்போது தெரிவித்தார். (நி-6)



சுற்றுச் சூழல் வாரத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபையின் ஏற்பாட்டில் ஆடியபாதம் வீதி அழகுபடுத்தல் திட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் புதன்கிழமை மரங்கள் நாட்டி வைக்கப்பட்டன. (படம்:-ரவிசாந்)

# தொழில் திணைக்களத்தின் அனைத்து காரியாலயங்களும் வெள்ளிக்கிழமைகளில் மூடப்படும்-தொழில் ஆணையாளர் நாயகம்

(கொழும்பு)

தொழில் திணைக்களத்தில் வாரத்துக்கு நான்கு நாட்கள் மாத்திரமே பணி இடம்பெறும்.

இன்று முதல் வெள்ளிக்கிழமை நாளில் மூடப்படும் என தொழில் ஆணையாளர் நாயகம் ஜெனரல் பீ.கே.பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தொழில் திணைக்களத்தின் பிரதான காரியாலயம் மற்றும் அனைத்து பிரதேச காரியாலயங்களும் இன்று 3 ஆம் திகதி முதல் வாரத்தில் அனைத்து வெள்ளிக்கிழமை தினத்திலும் மூடப்பட்டிருக்கும்.

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடி, வளப்பற்றாக்குறையை அடிப்படையாகக்கொண்டு அரச செலவினங்களை கட்டுப்படுத்துவதற்கு, அரச நிறுவனங்களின் சேவையாளர்களை வேலைக்கு அழைப்பதை வரையறுப்பதற்காக, அரச நிர்வாகத்தினால் விடுக்கப்பட்டிருக்கும் சுற்று நிருபத்துக்கு அமையவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது.

எனவே தொழில் திணைக்களத்தின் சேவையை பெற்றுக்கொள்ளும் சேவை பெறுநர்கள் வெள்ளிக்கிழமைகளில் தொழில் திணைக்களத்தின் பிரதான காரியாலயம் அல்லது பிரதேச காரியாலங்களுக்கு வருவதை தவிர்த்துக்கொள்ளுமாறு ஆணையாளர் பொது மக்களை கேட்டுக்கொண்டுள்ளார். (நி-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1987 இந்து நட்சத்திரம்: உத்தரம் 1<br>கி.பா: 37 ¾ சூரி, செவ் 9 இல்<br>உயரம்: 178 cm<br>தகைமை/தொழில்:HNDE (Civil Eng. Technical officer<br>எதிர்பார்ப்பு:A/L அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/10001 | பிறப்பு: 1989 கிறிஸ்தவம் RC<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா: சூரி 6 செவ் 5 இல்<br>உயரம்: 156 cm<br>தகைமை/தொழில்:(BFA) பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் தொழில்<br>தொ.இ:G/10178 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 3<br>கி.பா: 19 ½ சூரி 10 செவ் 8 இல்<br>உயரம்:165 cm<br>தகைமை/தொழில்: A/L சமுதாய உளநல சேவை உதவியாளர் (அரச)<br>எதிர்பார்ப்பு:அரச தொழில் ஆசிரியர் விரும்பத்தக்கது.<br>தொ.இ: B/10004 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>கி.பா: 14 ¾ சூரி 3 செவ் 2 இல்<br>உயரம்:5' 4"<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி ஆங்கில ஆசிரியை<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் விவகாரத்தானவர்<br>தொ.இ: G/10179 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம் : அவிட்டம் 4<br>கி.பா: 10 சூரி , செவ் 4 இல் உயரம்: 5' 5"<br>தகைமை/தொழில்: A/L வியாபாரம் (லண்டன்)<br>எதிர்பார்ப்பு : வெளிநாடு முக்கியம் உள்நாடாயின் வெளிநாடு செல்ல வேண்டும்<br>தொ.இ: B/10018 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 16 ½ சூரி, செவ் 9 இல்<br>உயரம் : 5' 3"<br>தகைமை/தொழில்:ரேடியோ கிறாப்பர் லண்டன்<br>எதிர்பார்ப்பு: லண்டன் PR<br>தொ.இ:G/10198 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம் : திருவோணம் 2<br>கி.பா: 15 ½ சூரி 2 செவ் 6 இல் உயரம்: 5' 8"<br>தகைமை/தொழில்: Network Administrator<br>எதிர்பார்ப்பு:சைவ போசனம் முக்கியம்.<br>தொ.இ: B/10023 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 4<br>கி.பா:30 சூரி 10 செவ் 8 இல்<br>தகைமை/தொழில்:வரி மதிப்பீட்டாளர்<br>எதிர்பார்ப்பு: வைத்தியர், பொறியியலாளர்<br>தொ.இ:G/10200 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் [illegible] ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 62

# ஆயிஷா பேசுகிறாள்



என் அன்புக்குரிய என்னைப் பெற்ற வரே! என்னைக் காணாது துடிக்கும் உறவினர்களே!நேற்றிலிருந்து எனக்காக பிரார்த்தித்த உறவுகளே!

என்னை சேற்றுக்குள்ளிருந்து தூக்கி யெடுத்த பெறா தந்தையே! அறிந்தும் அறியாமலும் என் புகைப் படத்தை இணையத்தில் இட்டு என்னைப் பாது காக்க துடித்த அன்பர்களே...

எனக்காக உலகமே இரங்கும் நொடிகளை எண்ணி இதயம் என் நிலையைப் பற்றி உங்களிடம் கூற உள்ளம் துடிக்கிறது...

கையோடு பொருள் வாங்க கடைப்பக்கம் நான் போக களவாடிக் கூட்டம் ஒன்று என் னைக் களவாடிச் சென்றது...

முகத்தை மறைத்து விசத்தைத் தெளித்து நினைவை மறக்கடித்த கயவரிடம் மன்றாடினேன். என் பஞ்சு போன்ற உடல் வலியால் துடிப்பதை தாயிடம் கூற கத்த எத்தனித்தேன் முடியவில்லை... என் தந்தையின் சாயலில் ஒருவர் அந்தக் கயவர் கூட்டத்திலே இருந்ததால் அவர் வதனத்தை பார்த்து கெஞ்சினேன். அவருக்கும் என் வலி புரிந்தது போலும்.

இருட்டிலே தான் இருந்தேன். இருட்டென்றால் எனக்கும் பயம்...நாட்டில் மின்வெட்டு அமுலில் இருக்கும் போது தாயின் முந்தானையை பிடித்துக் கொண்டே இருந்து பழகி விட்டேன். இப்போதும் அதே பயம் தான்... தாயின் முந்தானையை தேடிய கைகளுக்கு கயவனின் கைகளே கிட்டியது... தூக்கி எறிந்தான் என் கைகள் வலியில் துடித்தன... கத்தினேன் கதறினேன் யாருக்கும் கேட்கவில்லை... கேட்பதற்கு என் குரலின் சத்தம் வெளியில் வரவில்லை போலும்...

" அம்மா" என்று அழைத்தேன். உலகத்தில் அனைத்து படைப்புக்களுக்கும் கேட்டிருக்கும் என் சத்தம்... ஏன் உங்களில் யாருக்கும் கேட்கவில்லை...கடவுளின் விதியா காமுகனின் சதியா. சுயநினைவு இல்லாமல் போகிறேன்...

விழிக்கும் போது மூச்சுத் திணறுகிறது... வயலில் சேற்றின் வாசனை குடலைப் பிரட்டுகிறது...

என்னுடல் சேற்றுக்குள் உரமாகிடுமா? புழுக்கள் என்னை கொஞ்சம் கொஞ்சமாக உணவாக்கத் துடிக்கிறது. இன்னும் பூச்சிகள் என்னை மோப்பமிடுகின்றன.

வரம்பு வழியே சென்ற நாயொன்று தன் நாவினால் என்னை சுவைக்க முயற்சித்து சேற்றோடு மல்லுக்கட்டாமல் நகர்ந்து செல்கிறது...வயலோரம் கட்டியிருந்த மாடொன்றும் கண்களை சிமிட்டிப் பார்க்கிறது...பயத்திலே என்னுயிர் மண்ணுள் புதைகிறது...

உலகமே என்னை நாலாபக்கமும் தேடியும் வீட்டருகே வயலில் இருக்கும் என்னைக் கண்டு பிடிக்க இவ்வளவு நேரம் தேவையா... அச்சத்தினால் என் மூச்சு நின்று விடும் போல் தோன்றுகிறது... ஆம் என் மூச்சு வர் வரமறுக்கிறது ... இதயம் துடிக்க மறுக்கிறது... நான் இறந்து போகிறேன்...

என்னை மீட்க வந்த உறவொன்று என் மகள் போன்றவள் என்று ஓலமிடும் போது என் தந்தையின் பாசத்தை உணர்கிறேன்... போகிறேன் இறைவனிடம் மீள்கிறேன்...

"உறவுகளே" நாட்டில் நீதி உண்டானால் எனக்கான நீதியைப் பெற்றுத் தாருங்கள்.

என் போன்ற பிள்ளைகள் நிம்மதியாக வாழ வேண்டுமானால் என்னைக் கொன்ற கயவர்களைக் கண்டு பிடியுங்கள்... அனைவரும் தங்கள் பிள்ளைகளைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.. இறைவன் துணையிருப்பான்... இவ்வண்ணம் நான் உங்கள் பிள்ளை ஆயிஷா...

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# ராமர் கோயில் கருவறைக்கு அடிக்கல் நாட்டப்பட்டது



(டெல்லி)

உத்தரப் பிரதேச மாநிலம் அயோத்தியில் ராமர் கோயில் கருவறைக்கு முதல்வர் யோகி ஆதித்யநாத் அடிக்கல் நாட்டினார்.

உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்குப் பின்னர், உத்தரப் பிரதேச மாநிலம் அயோத்தியில் ராமர் கோயில் கட்டுமானப் பணிகள் கடந்த பெப்ரவரி மாதம் தொடங்கி நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# உக்ரை...
# நீடிக்க...
## ரஷ்யா ...

(மொஸ்கோ)

**உக்ரைனுக்கு நவீன ர... வழங்குவதாக அமெரி... அறிவித்துள்ள நிலை... நீடிக்கவே அமெரிக்கா... சாட்டியுள்ளது.**

புதிய ஏவுகணை அமை ப்புகளை வழங்குவதன் மூலம் அமெரிக்கா வேண்டுமென்றே எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவத... மாளிகை... தித் தொட... கோவ் தெ...

# முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியின் கொலையாளிக்கு விடுதலை



(வோஷிங்டன்)


அமெரிக்க முன்னாள் ஜனா திபதி டொனால்ட் ரீகனை சுட் டுக் கொன்றவர் என்ற குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டவர் நேற்று முன்தினம் பூரண விடுதலையை பெற்றுக் கொண்டு ள்ளார்.

1981 ஆம் ஆண்டு அப்போதைய அமெ ரிக்க ஜனாதிபதி டொனால்ட்ரீகனை சுட் டுக் கொன்றார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விசார ணைக்குட்படுத்தப்பட்டு வந்தவர் தான், ஜோன் ஹிங் கிலி என்பவர்.

இவர் சுமார் நாற்பத்தியொரு வருடங்களாக சிறைச்சாலை வாழ்வை வாழ்ந்து வந்த நிலையில் கடந்த சில வரு டங்களாக மூளை மாறாட்ட நோயினால் அவதியுற்று வருகின்ற நிலையில் நேற்று முன்தினம் மேற்படி நபரின் மேல் இருந்த அனைத்து குற்றப்பத்திரங்களும் செல் லுபடியற்றது என அமெரி க்காவின் வெர் ஜீனியா உயர் நீதிமன்றம் அறிவித்துள் ளது. மேற்படி நபர் சமூகத்தில் சுதந்திரமாக வாழ முடியும்.

அவரால் யாருக்கும் எந்த தீங்கும் இனி ஏற்படாது என்றும் யாரும் அவருக்கு எந்த தீமையும் ஏற்படுத்தக் கூடாது எனவும் அறிவித்து விடுதலை செய்துள்ளது. (நி-6)

# உலகின் அதி உயர் கட்டட நிர்மாணம் ஆரம்பம்
## சவுதி அரேபிய இளவரசர் அறிவிப்பு



(ரியாத்)

கிழக்கு நாடுகள் பெரிய கட்ட டங்களைக் கட்டுவதில் பெயர் பெற்றவை. இந்நிலையில் உல கின் மிக உயரமான கட்டடத்தை கட்டும் பணியை ஏற்பில் இற ங்கியுள்ளது சவுதி அரேபியா.

தற்போதைய உயரமான கட்டடம் டுபாய் நகரில் அமை ந்துள்ள நிலையில் நேற்று முன்தினம் புதிய உயரமான கட்டடத்திற்கான உத்தியோ கபூர்வ அறிவிப்பை சவுதி அரே பிய இளவரசர் அல்வ லீட் பின் டலாட் வெளியிட்டுள்ளார். மேற்படி புதிய உயரமான கட்டடம் ஜெத்தா என்ற நக ருக்கு அண்மையில் அமை யப் பெறவுள்ளதாகவும் தெரி வித்துள்ளார்.

மேலும் இக்கட்டடம் அதி நவீன முறையில் வடிவமை க்கப்படவுள்ளதாகவும் இதற் கான மொத்த செலவீனங்கள் குறித்த அறிவிப்பு பின்னர் வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


உலக பொருளாதாரத் தில் எண்ணெய் விலை அதிகரிப்பினால் மேலும் பணக்கார நாடாக சவுதி அரே பியா வளர்ந்து வரும் வாய் ப்புகள் இருப்பதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ரைன் மீதான போரை ...க்க அமெரிக்கா முயற்சி

## ...பா குற்றச்சாட்டு

**...வீன ரக நீண்ட தூர ஏவுகணைகளை ...அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ... நிலையில், உக்ரைனில் போரை ...ரிக்கா முயல்வதாக ரஷ்யா குற்றம்**



ஊற்றுவதாக ரஷ்ய ஜனாதிபதி மாளிகையான கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் தெரிவித்துள்ளார்.

அமைதிப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவதற்கான உக்ரைனிய தலைமையின் முயற்சிகளுக்கு இது போன்ற அமெரிக்காவின் செயற்பாடுகள் உதவாது என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, அமெரிக்காவுக்கு புறம்பாக உக்ரைனுக்கு ஒரு வான் பாதுகாப்பு அமைப்பை அனுப்புவதாக ஜேர்மன் அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

ஜேர்மனியிடம் உள்ள IRIS-T என்ற அதிநவீன வான் பாதுகாப்பு அமைப்பு ரஷ்ய வான்தாக்குதல்களில் இருந்து ஒரு முழு நகரத்தையும் பாதுகாக்க உக்ரைனுக்கு உதவும் என ஜேர்மன் ஜனாதிபதி ஓலாஃப் ஸ்கோல்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் உக்ரைன் - ரஷ்யா விவகாரத்தில் இவ்வாறான மூன்றாம் தரப்பு தலையீடுகளை கடுமையாக எதிர்ப்பதாகவும் இது மூன்றாம் நாடுகளுடனான மோதலுக்கான அபாயத்தை அதிகரிப்பதாக உள்ளதாகவும் ரஷ்யா தெரிவித்துள்ளது. (நி-6)

---

...து வந்த
...சில வரு
...மாறாட்ட
...தியுற்று
...ல் நேற்று
...ஃ நபரின்
...னைத்து
...ம் செல்
... அமெரி
...பா உயர்
...வித்துள்
...மூகத்தில்
...முடியும்,
...ருக்கும்
...ரற்பாது
...வருக்கு
...படுத்தக்
...றிவித்து
...ள்ளது.
(நி-6)

...ள்ளார்.
...பரமான
...ன்ற நக
...் அமை
...வும் தெரி

...டம் அதி
...டிவமை
...ும் இதற்
...னங்கள்
...பின்னர்
...எனவும்
...து.
...ாதாரத்
... விலை
...மேலும்
...ுதி அரே
...ம் வாய்
... சுட்டிக்
(நி-6)

---

# கொவிட் சீராகும் அறிகுறி வடகொரியாவில் இல்லை

## உலக சுகாதார அமைப்பு தெரிவிப்பு

(ஜெனிவா)

கொவிட் தொற்று நோய் அலையுடன் போராடி வரும் வடகொரியாவின் தொற்று நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் குறித்து உலக சுகாதார அமைப்பு சந்தேகம் வெளியிட்டுள்ளது.

சுதந்திரமான தரவுகளைப் பெற முடியாத நிலையில் அங்கு தொற்று நோய் நெருக்கடி மோசமடைவதற்கான அறிகுறிகளையே காண முடிகிறது. நிலைமை சீராவதற்கான சமிக்ஞைகளை காண முடியவில்லை எனவும் உலக சுகாதார அமைப்பு அச்சம் வெளியிட்டுள்ளது.

இரண்டு வாரங்களுக்கு முன்பு அங்கு தினசரி கொவிட் தொற்றுக்குள்ளானதாக நம்பப்படும் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 390,000 பேர் வரை அடையாளம் காணப்பட்டனர்.

தற்போது இந்த எண்ணிக்கை தினசரி 100,000 என்ற அளவுக்குக் குறைந்துள்ளதாகவும், இதனை அடிப்படையாகக் கொண்டு கொவிட் அலை அடங்கி வருவதாகவும் வட கொரிய அரசு ஊடகம் தெரிவித்துள்ளது.

ஆனால் வடகொரியாவில் இதுவரை மொத்தம் எத்தனை பேர் கொவிட் தொற்று நோயால் பாதிக்கப்பட்டனர்? எவ்வாறு சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன? என்பது போன்ற தகவல்களை வட கொரிய அரசாங்கம் உறுதிப்படுத்தவில்லை.

வட கொரிய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஊடகங்கள் மூலம் வெளியிடப்படும் தொற்று நோய் குறித்த புள்ளிவிபரங்கள் உண்மையானவையா? இருக்க முடியாது. இவ்வாறான மூடிமறைப்பு மூலம் தொற்று நோய் குறித்த மதிப்பீடுகளை செய்து அதனைக் கட்டுப்படுத்துவது கடினம் என உலக சுகாதார அமைப்பின் சுகாதார நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். (நி-6)

---

# அமெரிக்க மருத்துவமனையில் துப்பாக்கிச் சூடு




(வோஷிங்டன்)

அமெரிக்காவின்ஒகலாமா பிரதேசத்தில் உள்ள சென் பிரான்சிஸ் மருத்துவமனையில் நேற்று நடைபெற்ற துப்பாக்கி பிரயோகத்தில் நால்வர் மரணமடைந்துள்ளதாகவும், காயமடைந்தவர்களை கணிப்பிட முடியாதுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சனநெருக்கடி அதிகமாக காணப்பட்டதால் இதுவரை காயமடைந்தவர்களை கணக்கிடமுடியவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதிக எண்ணிக்கையிலான நோயாளர்கள் தினம் கூடும் மருத்துவமனையாக மேற்படி சென்பிரான்சிஸ் மருத்துவமனை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

---

# உலகின் மிகப்பெரிய கடல் புல் அவுஸ்திரேலியக் கடலில் கண்டுபிடிப்பு

(கன்பெரா)

பூமியில் அறியப்பட்ட மிகப்பெரிய தாவரமான மன்ஹாட்டனை விட மூன்று மடங்கு பெரிய கடல் புல் அவுஸ்திரேலியாவின் கடற்பரப்பில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மரபணு சோதனையைப் பயன்படுத்தி, விஞ்ஞானிகள் மேற்கு அவுஸ்திரேலியாவில் நீருக்கடியில் ஒரு பெரிய புல் வெளியைக் கொண்ட தாவரங்கள் இருப்பதைக் கண்டறிந்துள்ளனர்.



இது ஒரு விதையிலிருந்து குறைந்தது 4,500 ஆண்டுகளுக்கும் மேலாக பரவியதாக நம்பப்படுகிறது.

குறித்த கடல் புல் சுமார் 200 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் உள்ளது என்று மேற்கு அவுஸ்திரேலியா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்வேறு திருட்டுக்களுடன் தொடர்புடைய மூவர் பொலிஸாரால் கைது



(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கடந்த 2 மாதங்களுக்கு முன்பு இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸ் சிறப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய நேற்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்திற்கு செல்வதற்காக வீதியால் நடந்து சென்ற முதியவர்கள் அணிந்திருந்த தோடு மற்றும் சங்கிலி என்பனவற்றை களவாடியமை, வீடு ஒன்றில் தண்ணீர் பம்பி திருடியமை, இரும்பகம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கமரா மற்றும் பெறுமதிமிக்க இரும்புகள் களவாடப்பட்டமை போன்ற குற்றச் செயல்கள் தொடர்பாக தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

அதனையடுத்து இரண்டு மாதங்களுக்குப் பின்னர் நேற்று பொலிஸ் சிறப்பு பிரிவினரால் மூன்று சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதுடன் தடயப் பொருட்களும் பொலி ஸாரால் மீட்கப்பட்டன.

அத்துடன் சந்தேக நபர்கள் மூவரையும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பொழுது எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (4-6-316)

# நெல் மூடைகள் திருடியவர் பொலிஸாரால் கைது

(குருமன்காடு)

வவுனியாவில் பாராளுமன்ற உறுப்பினரின் அரிசி ஆலையில் கைவரிசை காட்டிய 34 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, குருமன்காடு பகுதியில் அமைந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தானிற்குச் சொந்தமான அரிசி ஆலையில் 250 நெல் மூடைகள் கடந்த திங்கட்கிழமை திருடப்பட்டிருந்தன.

இது தொடர்பில் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் துரித விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

விசாரணைகளின் போது வவுனியா வைரவ புளியங்குளத்தைச் சேர்ந்த 34 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன், அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து 90 நெல் மூடைகள் மீட்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளின் பின்னர் குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்த பொலி ஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (4-6-250)



பிரசித்தி பெற்ற இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா நேற்று வியாழக்கிழமை காலை ஆயிரக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் வெகு சிறப்பாக இடம்பெற்றது.

(படம்:- ரவிசாந், சிவசாந்தன்)

# தமிழக அரசின் உதவிப்பொருட்கள் வவுனியாவை வந்தடைந்தன



(நெளுக்குளம்)

தமிழக அரசினால் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட உதவிப் பொருட்கள் நேற்று புகையிரதம் ஊடாக வவுனியாவை வந்தடைந்தது.

இவ் உதவிப் பொருட்கள் தெரிவு செய்யப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. இதனடிப்படையில் வவுனியா பிரதேச செயலகத்திற்கு 12 ஆயிரத்து 15, வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்கு 3,560, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலகத்திற்கு 2000, வெங்கல செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்கு 4,675 உணவுப் பொதிகள் என வவுனியா மாவட்டத்திற்கு மொத்தமாக 22 ஆயிரத்த 250 குடும்பங்களுக்கான பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

இவ் உணவுப் பொதிகளை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் பொறுப் பேற்றுக்கொண்டு குறித்த பிரதேச செயலாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரிடம் கையளித்தனர். (4-6-299)

# வவுனியாவில் இளைஞன் மாயம்

## பொலிஸில் முறைப்பாடு



(நெளுக்குளம்)

வவுனியா குருமன்காட்டைச் சேர்ந்த கயேந்திரன் கிருத்திகன் என்ற இளைஞனை கடந்த 31 ஆம் திகதியிலிருந்து காணவில்லை என வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குருமன்காடு பகுதியைச் சேர்ந்த குறித்த இளைஞன் அன்றைய தினம் அதிகாலை 4 மணியளவில் தனது வீட்டில் இருந்து வெளியே சென்றுள்ளார். எனினும் நீண்ட நேரமாகியும் அவர் வீடு திரும்பவில்லை.

இதனையடுத்து அவரது குடும்பத்தினர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

அவர் தொடர்பான தகவல்கள் தெரிந்தவர்கள் 077 169 1244 ,077 930 2469 ஆகிய தொலைபேசி இலக்கங்களிற்கு தெரியப்படுத்துமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-299)

# கிளிநொச்சியில் 14 பேர் கொண்ட குழு வீடு புகுந்து கொடூர தாக்குதல்

## குழந்தை உட்பட்ட நால்வர் மருத்துவமனையில்

(கண்டாவளை)

கிளிநொச்சி அம்பாள்குளம் பகுதியில் நேற்று முன்தினம் மதுபோதையில் சென்ற குழுவினரால் 12 வயது மற்றும் 3 வயது குழந்தை உட்பட நான்கு பேர் மீது கடுமையான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் காயமடைந்த நான்கு பேரும் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட அம்பாள்குளம் பகுதியில் வசித்து வந்த குடும்பமொன்றின் வீட்டுக்குள் 14 பேர் கொண்ட குழுவினர் கத்தி மற்றும் கூரிய ஆயுதங்களுடன் அத்துமீறிச் சென்று வீட்டில் இருந்த தாய் மற்றும் அவரது 3 வயது குழந்தை, 12 வயதுடைய மகள் ஆகியோர் மீது கடுமையாக தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதுடன் மேலும் ஒருவருக்கும் தாக்குதல் நடத்தப்பட்டது. குறித்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நான்கு பேரும் கிளி நொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (6-4-315)

# எரிவாயு சிலிண்டரைப் பெற வழமையாக கொள்வனவு செய்யும் கடைகளில் முற்பதிவு செய்யுங்கள்

## கிளிநொச்சி மாவட்ட செயலகம் அறிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் சமையல் எரிவாயு சிலிண்டர்களை பகிர்ந்தளிப்பதற்கான நடைமுறைகளை சீரான முறையில் மேற்கொள்ள பிரதேச செயலாளர் ஊடாக கிராம உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மாவட்டச் செயலகத்தினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அதாவது கிளிநொச்சி மாவட்டத்தில் எரிவாயு சிலிண்டர் பாவனையாளர்கள் தாங்கள் முன்பு கொள்வனவு செய்த எரிவாயு விநியோகம் செய்யும் கடைகளிலிருந்து (முகவர்களிடமிருந்து) தமது கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

எனவே சிரமங்களை தவிர்த்து தாங்கள் முன்பு கொள்வனவு செய்த கடைகளில் முன்பதிவினை மேற்கொள்ளும் அதே சந்தர்ப்பத்தில் முன்னுரிமை அடிப்படையில் சிலிண்டர் விநியோகத்தினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்விநியோக நடைமுறைகளை சீரான முறையில் மேற்கொள்ள பிர தேச செயலாளர் ஊடாக கிராம உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. எனவே இன்று முதல் (நேற்று) மாவட்டத்திற்கான எரிவாயு சிலிண்டர் வழங்குநர் நிலையத்தில் எந்தவிதமான விநியோகித்தல் நடைமுறைகளும் பின்பற்றப்படாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-6-315)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் டெங்கு பரவல் தீவிரம்

## டெங்கு கட்டுப்பாட்டுப்பிரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

**கடந்த சில மாதங்களில் டெங்கு நோய் பரவல் வேகமாக அதிகரித்துள்ளதாக டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.**



ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், இந்த வருடத்தில் இதுவரை 24,523 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இவற்றில் 6,483 பேர் மே மாதத்தில் பதிவாகியுள்ளதாக டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாத்திரம் 313 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் மேல் மாகாணத்தின் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களிலேயே டெங்கு நோயாளர்கள் அதிகளவானோர் இனங்காணப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், கண்டி, காலி, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் அதிகளவு டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-6)

# ஹரினுக்கு பதில் நியோமல்





(கொழும்பு)
ஐக்கிய மக்கள் சக்தியின் வுத்தளை தொகுதியின் புதிய அமைப்பாளராக, முன்னாள் பிரதி அமைச்சர் நியோமல் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

வத்தளை தொகுதி அமைப்பாளராக செயற்பட்ட ஹரின் பெர்னாண்டோ, அரசுக்கு ஆதரவளித்து அமைச்சு பதவியை பெற்றுக்கொண்டுள்ளார்.

இதனால் தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையிலேயே புதிய அமைப்பாளராக நியோமல் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். (நி-6)

# 20 ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்ததே நான் செய்த ஒரே பாவம் - தயாசிறி புலம்பல்

(கொழும்பு)
அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவளிப்பதாகவும், தேவையான திருத்தங்களைச் செய்வதாகவும் அதன் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற மாநாடு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தான் செய்த ஒரே பாவம் 20 ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்தது தான் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

# முச்சக்கரவண்டி விபத்தில் தாயும் மகளும் பலி

## தந்தையும் மகனும் படுகாயம்

(தம்புள்ளை)
ஏ-9 பிரதான வீதியில் கவரக்குளம் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் தாயும் மகளும் உயிரிழந்துள்ளதுடன், தந்தையும் மகனும் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கவரங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தம்புள்ளையிலிருந்து அநுராதபுரம் நோக்கி வழிபாடுகளுக்காக சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் பயணித்த முச்சக்கர வண்டியே இவ்வாறு கவரங்குளம் பகுதியில் பாதையை விட்டு விலகி அருகில் இருந்த கால்வாயில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது 41 வயதுடைய தாயும் 13 வயது சிறுமியும் உயிரிழந்துள்ளதுடன் படுகாயம் அடைந்த தந்தையும் மகனும் அநுராதபுரம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

இவர்கள் நால்வரும் தம்புள்ளை-ரத்மலகஹ எல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

சம்பவம் தொடர்பில் கவரங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-6)

# ஒரே நாடு - ஒரே சட்டம்

## செயலணியின் பதவிக் காலம் நீடிப்பு



(கொழும்பு)
ஒரே நாடு - ஒரே சட்டம் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் பதவிக்காலம் மேலும் 3 வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய, ஜனாதிபதி செயலாளரினால் வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானியினூடாக செயலணியின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

ஒரே நாடு - ஒரே சட்டம் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் பதவிக்காலம் கடந்த மே 27 ஆம் திகதியுடன் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# மே 9 தாக்குதல் சம்பவம்

## கொழும்பு மாநகர உறுப்பினர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் சரண்





(கொழும்பு)
கொழும்பு மாநகர சபையின் உறுப்பினர் மகிந்த கஹந்தகம, குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் சரணடைந்துள்ளார்.

கடந்த மே மாதம் 9 ஆம் திகதி கொள்ளுப்பிட்டி மற்றும் காலிமுகத்திடலில் இடம்பெற்ற சம்பவங்களில் சந்தேகநபராக குறிப்பிடப்பட்டிருந்த மகிந்த கஹந்தகமவே இவ்வாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் சரணடைந்துள்ளார்.

அமைதி போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தச் சென்ற கும்பலில் இருந்ததாக அடையாளம் காணப்பட்ட மகிந்த கஹந்தகமவிற்கு வெளிநாடு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

# கடனுதவிகளை பயன்படுத்தி முதலில் மருந்து பற்றாக்குறையை நீக்குங்கள்

## கோப்குழு பரிந்துரை

(கொழும்பு)
கடனுதவிகளைப் பயன்படுத்தி நாட்டிலுள்ள மருந்துப் பற்றாக்குறையை விரைவில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோப் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் பரிந்துரைத்துள்ளார்.

நாட்டில் அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் பற்றாக் குறையாக இருக்கும் சூழ் நிலையில் இந்த நிதியைப் பயன்படுத்தி தேவையான மருந்துகளை விரைவாகப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர்களும் சுட்டிக்காட்டினர். (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 320 | 250 | 250 | 360 |
| உருளைக்கிழங்கு | 250 | 240 | 230 | 250 |
| பச்சைமிளகாய் | 450 | 400 | 420 | 450 |
| தக்காளி | 800 | 700 | 650 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 200 | 140 | 140 |
| கோவா | 350 | 240 | 300 | 320 |
| கரட் | 200 | 340 | 380 | 400 |
| பூசணி | 140 | 120 | 120 | 160 |
| புடோல் | 250 | 200 | 220 | 260 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 400 | 500 | 200-550 | 500 |
| பெரிய வெங்காயம் | 250 | 240 | 230 | 250 |
| பாகற்காய் | 650 | 650 | 800 | 450 |
| வெண்டக்காய் | 180 | 160 | 180 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 400 | 350 | 240 |
| லீக்ஸ் | 250 | 250 | 280 | 320 |
| பீற்றூட் | 380 | 400 | 280 | 400 |
| கறிமிளகாய் | 500 | 600 | 600 | 500 |
| முருங்கைக்காய் | 1500 | 1600 | 1000 | 1200 |
| போஞ்சி | 800 | 700 | 800 | 600 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | — | 320 |
| கீரை - 1 பிடி | 70 | 50 | 120 | 140 |
| தேசிக்காய் | 550 | 500 | 600 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 100-200 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 200 | 180 | 200 |
| வெங்காயப்பூ | — | 600 | — | — |
| முள்ளங்கி | 120 | 150 | — | 280 |
| பொன்னாங்கண்ணி | 70 | 70 | 100 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | — | — | — | 120 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## மருமகள் எப்படி?



(நேற்றைய தொடர்ச்சி)

கிருஷ்ண சாஸ்திரியும் "உங்கள் ஊரிலும் மாதம் ஒரு முறை அமாவாசை வருமா? அல்லது இரவிலும் பௌர்ணமி நிலவா?" என்று கேட்டான். மீனாவும் "எங்கள் ஊரில் அமாவாசை இரவிலும் பௌர்ணமி நிலவுதான். எங்கள் ஊரில் அமாவாசை இரவைப் பார்த்தவர்களே இல்லை" என்றாள்.

கிருஷ்ண சாஸ்திரியும் "சரி, கோடை காலத்திலும் பறவைகள் உங்கள் ஊர் வயல்களில் வந்து தங்குகின்றனவா?" அல்லது மழை காலத்தில் மட்டும் வருகின்றனவா?" என்று கேட்டான். மீனாவும் "எங்கள் ஊர் வயல்களில் வருடம் முழுவதும் வந்து தங்கும்" என்றாள். கிருஷ்ண சாஸ்திரியும் "சரி, ஆகாயம் முழுவதும் பந்தலாகி பூமி முழுவதிலும் ஆசனம் போட்டு உன் தந்தை நம் கல்யாணத்தை நடத்துவாரா?" எனக் கேட்க மீனாவும் "அப்படிச் செய்தால் நம் கல்யாணம் ஆனதும் என் வீட்டவர்களுக்கு ஆகாயமே வீடாகி விடும்" என்றாள். அதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த மாதவ சாஸ்திரி தம் மகனிடம் "நீ இவ்வளவு கேட்டது போதும். பெண் அழகோடு புத்திசாலி எனவும் தெரிந்து விட்டது" எனக் கூறி விட்டு குப்பு சாஸ்திரியிடம் "நீங்கள் பஞ்சாங்கம் பார்த்து முகூர்த்த நாளைக் கூறுங்கள். அன்று இவர்களது விவாகத்தை நடத்தி விடலாம்" என்றார்.

குப்பு சாஸ்திரியும் மகிழ்ந்து போய் "ஆகா! அப்படியே செய்யலாம்". எனவே மாதவ சாஸ்திரியும் அவரிடம் விடை பெற்றுக் கொண்டு தம் மனைவியையும் மகனையும் அழைத்துக் கொண்டு தம் குதிரை வண்டியில் அமர்ந்து ஊர் திரும்பினார்.

வழியில் அவரது மனைவி "நம் கிருஷ்ணன் அந்தப் பெண்ணிடம் கேட்ட கேள்விகளும் அந்தப் பெண் கூறிய விடைகளும் எனக்குப் புரியவில்லையே" என மாதவ சாஸ்திரியிடம் கூறினாள். அவரும் "உனக்குப் புரிந்திருக்காது என்று தான் நானும் நினைத்தேன். முதலில் கிருஷ்ணன் கண்ணாடிக்கு விரோதி உண்டா என்று கேட்டான்.

அதன் பொருள் அவர்கள் வீட்டில் விகாரமானவர்கள் இருக்கிறார்களா? என்பதே. அவள் இல்லை என்று கூறிய தோடு தன் தங்கைகளும் தம்பியும் அழகானவர்களே என்று கூறி தானும் அழகானவள் என்று கூறினாள். தானும் அழகானவள் என்பதைக் கிருஷ்ணனே நேரில் பார்த்துக் கொண்டிருக்கிறானே என்று கூறவே வளையல்களைப் பார்க்கக் கண்ணாடி தேவை இல்லை என்று கூறினாள். (தொடரும்)

# கம்பராமாயணம்

## சுந்தர காண்டம்




இராமனிடமிருந்து தான்வந்ததையும் அவன் தான் அனுப்பி வைத்தான் என்பதையும் கூறி இராமன் திருமேனி அழகைக் கூறினான்; அப்போது அவன் தான் ஒரு சொல்லின் செல்வன் என்பதை நிறுவினான்; கவிஞனாகவும் காட்சி அளித்தான்.

"இராமன் திருவடிகள் தாமரை போன்றும் பவளத்தைப் போன்றும் உள்ளன; கால் விரல்கள் இளஞ் சூரியனைப் போன்றன; நகங்கள் வைரத்தினும் அழகியன; கணுக்கள் அம்பறாத் துணியைப் போன்றன; தொடைகள் கருடனின் கழுத்தைப் போன்றன; உந்தி மகிழ மலருக்கு ஒப்பாகும்; மார்பு திருமகன் உறையும் இடமாகும்; கைகள் ஐராவதம் என்னும் யானையின் துதிக்கை போன்றது; கை நகங்கள் அரும்பு போலக் கூர்மையன; தோள்கள் மலை போன்றன; கழுத்து திருமாலின் கரத்தில் உள்ள சங்கு போன்றது; முகமும் கண்களும் தாமரை மலர்கள் போன்றன; பல்லுக்கு முத்தும் நிலவின் துண்டும் உவமைகள்; குனித்த புருவம் வளைந்த வில் போன்றன; நெற்றி எட்டாம் நாள் சந்திரன் போன்றது; நடைக்கு எருதும் யானையும் உவமை" என்றான். இராமன் உருவை இவ்வருணனைகளால் அனுமன் காட்டினான்.

அவனுடைய ஒவ்வொரு சொல்லும் அமுதத் துளிகளாய் அவள் செவிகளில் நிறைந்தன; தேன் துளிகளாய் இனித்தன. "உன் அமுத மொழிகள் என் மனத்தை வருக்கி விட்டன. என் உயிரைத் தளிர்ப்பச் செய்து விட்டாய்; வாழ்க நீ" என்று வாழ்த்தினாள். "காட்சிக்குச் சான்று தந்த நீ சாட்சி வேறு யாதாவது கூற முடியுமா" என்று கேட்டாள்.

இராமனுக்கும் சீதைக்கும் மட்டுமே தெரிந்த சுவையான அனுபவங்கள் சில அனுமனிடம் தெரிவிக்கப்பட்டன. அவற்றுள் இரண்டினை அவன் எடுத்துரைத்தான். நாட்டை விட்டுக் காட்டுக்குச் சென்ற போது, அயோத்தியின் மதிலைக் கடக்கும் முன்பு, "காட்டை அடைந்து விட்டோமா?" என்று கேட்ட சீதையின் குழந்தைத்தனத்தை நினைவுபடுத்தினான்.

சுமந்திரனிடம் பூவையையும் கிள்ளையையும் கவனித்துக் கொள்ளும்படி தங்கையர்க்குச் சொல்லி அனுப்பிய அன்புச் செய்தியை அறிவித்தான்.

கூற்றுகளால் அவளை நம்ப வைத்த அனுமன், உறுதி தரும் அடையாளம் ஒன்றினையும் அவள் முன் நீட்டினான். இராமன் கை விரலை அழகு படுத்திய மோதிரமாய் அது இருத்தலைக் கண்டாள்; அதை அன்புடன் வாங்கிக் கொண்டாள்; வஞ்சகர் நாட்டுக்கு வந்ததால் அது மாசு பட்டுவிட்டதே என்று கூறி கண்ணீரால் அதனைக் குளிப்பாட்டினாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்ட நடவடிக்கைகள் ஆரம்பத்தில் இன்பமாக இருந்தாலும் கடைசியில் கொடுந் துன்பக் காட்டுக்குத் தான் அழைத்துச் செல்லும்.

~ கவி தாம்ஸன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிறுவர்கள் மீது நடக்கும் வன்கொடுமை காணீரோ!

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் விளைவு இன்னும் மோசமாக மாறும் என எதிர்வு கூறப்படுகிறது.

இதற்கும் மேலாக இன்னும் இரண்டு மாதங்களின் பின்னர் நாட்டில் மிகப்பெரும் பஞ்சம் ஏற்படுமென இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

நாட்டில் ஏற்படப்போகும் பஞ்சத்தினின்றும் தப்பிப் பிழைப்பதாயின் விவசாயத்தில் ஈடுபடுவதே ஒரே வழியாகும்.

எனினும் விவசாயம் மக்களுக்கு விருப்பமற்றதாக மாறிவிட்ட நிலையில் நெற்செய்கை, மரக்கறிச் செய்கை, வீட்டுத்தோட்டம், பசு வளர்த்தல் என்பவற்றில் மக்கள் இம்மியும் ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லை.

நிலைமை இவ்வாறாக இருக்கையில், நாளுக்கு நாள் பொருட்களின் விலை எகிறிக் கொள்கிறது.

இவையொருபுறமிருக்க, பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டில் சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு என்பன சீர்குலைந்து கொலை, கொள்ளை, களவு என்பன தாராளமாக நடந்தாகப் போகிறது.

இதனை உறுதி செய்வதுபோல அண்மைய நாட்களில் நாட்டின் பல்வேறு இடங்களில் சிறுவர்கள் மீது துஷ்பிரயோகச் சம்பவங்கள் நடந்துள்ளன.

ஆம், களுத்துறை மாவட்டத்தின் அட்டுலுகம பிரதேசத்தில் சிறுமி ஆயிஷா கொல்லப்பட்ட சம்பவம் முதல் வவுனியாவில் சிறுமி ஒருவர் மர்மமான முறையில் மரணமடைந்தமை. அம்பாறையில் சிறுமி மீது நடந்த துஷ்பிரயோகம் என ஒரு பட்டியல் நீண்டு செல்கிறது.

இவ்வாறான சம்பவங்களின் அடிப்படையில், போதைப்பொருள் பாவனையும் இலஞ்சம், ஊழல், போதைவஸ்து வியாபாரிகளுடனான தொடர்பு எனப் பல வழிகளிலும் கெட்டுப் போயுள்ள பொலிஸ் நிர்வாகம் என்பன காரணமாக சிறுவர்களின் பாதுகாப்பு கேள்விக்குரியதாகியுள்ளது.

இவ்வாறு சிறுவர்கள் மீது நடக்கின்ற வன்கொடுமைகள் காலக்கிரமத்தில் பெரியவர்களை நோக்கி நகரும் என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆக, நாட்டில் பொருளாதார நெருக்கடியால் ஏற்படவுள்ள பஞ்சம், பசி, பட்டினியில் இருந்து மீள்வது எங்ஙனம் என ஏங்கிக் கொண்டிருக்கும் வேளையில் சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகம், போதைவஸ்து பாவனையாளர்களின் சேட்டைகள், சண்டித்தனக்காரர்களின் அத்துமீறல்கள் எனப் பொதுமக்கள் மிகப்பெரும் குழப்பங்களைச் சந்திக்கப் போகின்றனர்.

இவ்வாறான நிலைமை ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டவை என்பதுடன் இத்துயரச் சம்பவங்கள் நாட்டில் மலியும்போது இந்த நாடு மனிதர்கள் வாழ்வதற்குரியதல்ல என்ற முடிவுக்கு மக்கள் வருவர்.

மக்களின் இந்த நிலைப்பாடு நாட்டை மிகமோசமாகப் பாதிக்கும்.

எனவே இந்த நிலைமையில் இருந்து நாட்டைக் காப்பாற்றுவதாயின், மக்கள் விழிப்பாக இருப்பதுடன் இளைஞர்கள் தத்தம் பிரதேசங்களில் விழிப்புக்குழுக்களை அமைத்து தீவிர கண்காணிப்புகளில் ஈடுபட வேண்டும்.

இதற்கும் மேலாக, பொலிஸ் நிர்வாகம் சீரமைக்கப்பட்டு நாட்டில் சட்டம், ஒழுங்கைப் பாதுகாப்பது தமது கடமை என்ற உணர்வை பொலிஸாரிடம் ஏற்படுத்த வேண்டும்.

இல்லையேல் நிலைமை கவலைக்கிடமாவதை எவராலும் தடுக்க முடியாது.

# கொடிகாமத்தில் வைத்தியரை தாக்கச் சென்ற குற்றச்சாட்டில் 8 இளைஞர்கள் பொலிஸாரால் கைது

(சாவகச்சேரி)

கொடிகாமம் பகுதியில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் கடமையாற்றும் வைத்தியரை தாக்கச் சென்ற குற்றச்சாட்டிலும் வைத்தியசாலைக்குள் நுழைந்து குழப்பம்விளைவித்த குற்றச்சாட்டிலும் நேற்று வியாழக்கிழமை மதியம் எட்டு இளைஞர்களை கொடிகாமப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாகமேலும் தெரியவருவதாவது.

வியாழக் கிழமை காலை 23 வயதான யுவதி ஒருவர் தனது தாத்தாவினை அழைத்துக்கொண்டு குறித்த அரச வைத்தியசாலைக்கு சென்றுள்ளார்.

இந்நிலையில் வயோதிபரை பரிசோதித்த வைத்தியர் அவரை மருந்து எடுக்க அனுப்பி வைத்த பின்னர் யுவதியின் தொலைபேசி இலக்கத்தை கேட்டதாகவும் யுவதி தொலைபேசி இல்லை எனக் கூறிய நிலையில் தனது தொலைபேசி இலக்கத்தை எழுதி யுவதியிடம் வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் வீடு திரும்பிய யுவதி சம்பவத்தை தனது உறவுகளுக்கு தெரிவித்த நிலையில் 8 இளைஞர்கள் வைத்தியசாலைக்கு சென்று வைத்தியருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன் அவரை பொலிஸ் நிலையம் இழுத்துச் செல்லவும் முற்பட்டுள்ளனர். இந்நிலையில் குறித்த வைத்தியர் பொலிஸாருக்கு தொலைபேசி வாயிலாக தகவல் வழங்கிய நிலையில் சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் 8 இளைஞர்களையும் கைது செய்துள்ளனர். அதேவேளை 23 வயதான குறித்த யுவதியும் வைத்தியருக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(ம-30)

### 16 ஆயிரம் சமையல் எரிவாயு கொள்கலன்கள்

## நாடளாவிய ரீதியில் இன்று விநியோகிக்கப்படும்

(கொழும்பு)

16 ஆயிரம் சமையல் எரிவாயு கொள்கலன்கள் இன்று நாடளாவிய ரீதியில் விநியோகிக்கப்படவுள்ளதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

குறித்த எரிவாயு கொள்கலன்களை விநியோகிக்கும் விநியோகஸ்த்தர்கள் தொடர்பான விபரங்களை லிட்ரோ நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தள பக்கத்தில் பார்வையிட முடியும் எனவும் அந்நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

3,950 மெட்ரிக்தொன் எரிவாயு அடங்கிய குறித்த கப்பல் கடந்த வார இறுதியில் நாட்டை வந்தடைந்த நிலையில் அதிலிருந்து எரிவாயுவை தரையிறக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதனடிப்படையில் கடந்த இரு நாட்களாக சமையல் எரிவாயு கொள்கலன் விநியோகம் வழமைக்கு திரும்பியுள்ளது.

(ம)

## வர்த்தக நிலையத்தில் நின்ற சிறுமியை தள்ளி விழுத்திவிட்டு ரூ. 27 ஆயிரம் கொள்ளை துன்னாலை கிழக்கில் சம்பவம்

(கரணவாய்)

வர்த்தக நிலையத்தில் நின்ற சிறுமியை தள்ளி வீழ்த்திவிட்டு மேசை லாச்சியில் இருந்த 27 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை துன்னாலை கிழக்கில் உள்ள சமுர்த்தி வங்கிக்கு அருகாமையில் உள்ள வர்த்தக நிலையத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வர்த்தகர் தனது மகளை வர்த்தக நிலையத்தில் நிறுத்திவிட்டு வெளியில் சென்ற சமயம் வர்த்தக நிலையத்திற்கு வந்த இருவர் சிறுமியை தள்ளி வீழ்த்திவிட்டு மேசை லாச்சிக்குள் இருந்த 27 ஆயிரம் ரூபாய் பணத்தை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். இது தொடர்பில் நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ம-60)

### அநுராதபுரத்தில் கொழுந்து சேகரிப்பவரால்

## 13 வயது பாடசாலை மாணவி துஷ்பிரயோகம்

அநுராதபுரத்தில் பச்சை கொழுந்தை சேகரிக்கும் 35 வயதானவர், 13 வயதான பாடசாலை மாணவியை அவர் வீட்டில் வைத்தே துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார்.

சந்தேநபர், கலவான தெல்கொட பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டார் என கலவான பொலிஸார் தெரிவித்தனர்.

தேயிலை தொழிற்சாலைகளுக்கு பச்சை கொழுந்துகளை சேகரிக்கும் மேற்படி நபர், சிறுமி தனியாக இருப்பதை கண்டு அச்சிறுமியின் வீட்டுக்குள் நுழைந்து பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த பொலிஸார், கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

(ம)

### இறக்குமதி செய்யப்படும்

## சகல மதுபானங்களின் விலைகளும் அதிகரிப்பு

இறக்குமதி செய்யப்படும் சகல மதுபானங்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இறக்குமதி செய்யப்படும் மதுபானங்களுக்கான தீர்வை, நிதி அமைச்சினால் 100க்கு 100 சதவீதமாக அதிகரித்தமையே இதற்கான காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வைன், விஸ்கி, ரம், ஜின், வொட்கா ஆகிய இறக்குமதி மதுபானங்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

வற் வரி அதிகரிப்பு காரணமாக நேற்று முன்தினம் முதல் அமுலாகும் வகையில் உள்ளூர் மதுபான போத்தல் ஒன்றின் விலை 520 ரூபாயால் அதிகரிக்கப்பட்டது.

அத்துடன் பியர் போத்தல் ஒன்றின் விலை 30 ரூபாயால் அதிகரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.(ம)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

வாழ்க்கை வாழ்வதற்கே என்று சொல்லுவார்கள். வாழ்க்கையில் வசதிகளை அமைத்துக்கொள்வது நாம் தான். பல சமயங்களில் வசதிகளுக்கேற்ப சுகங்களும் அமைந்து விடுகின்றன.

ஆனால் அதோடு துக்கமும் அதிகரித்துக் கொண்டே போகின்றது. உதாரணமாக, நடந்து போகிறவன் இடறி விழுந்தால் சிறு காயம் ஏற்படுகின்றது. அவனே சைக்கிளில் இருந்து விழுந்தால் கை எலும்பு முறிகின்றது.

மோட்டாரில் சென்று ஆபத்து ஏற்பட்டால் பல பாகங்கள் சிதைவுறுகின்றன. கப்பலிலோ ஆகாய விமானத்திலோ சென்று விபத்து ஏற்பட்டால் ஆளே கிடைப்பதில்லை!

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### எல்லா விடைகளின் இலக்கு

**மேற்கோள்கள்:**

மக்களுடைய நம்பிக்கையை பெறும் வரை, அவர்களுக்கு நம்பிக்கைத்துரோகம் செய்ய முடியாது. தீயவன் முதலில் நம்பிக்கையைப் பெறுகிறான். பின்னர் நம்பிக்கைத் துரோகம் செய்கிறான்.

ஆனால் ஒரு விவேகியின் ஏமாற்றுதல் கூட மிக உயர்ந்த நன்மையை மட்டுமே தரும்.

"தீயவனைக் கண்டு அஞ்சுதல் ஒரு பலமற்ற சமுதாயத்தின் அடையாளம், தீயதைச் செய்ய அஞ்சுதல் ஒரு பலமுள்ள சமுதாயத்தின் அடையாளம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 77

அட்டவணை A

| | 1 | 2 | 3 | | |
|---|---|---|---|---|---|
| | | தேவையான சனத்தொகை / உறுப்பினர் | இனரீதியான சனத் தொகை | | |
| மாவட்டம் | உறுப்பினர்கள் | | சிங்களம் % | தமிழ் % | முஸ்லீம் % |
| கொழும்பு | 20 | 5.0% | 76.5 | 11.1 | 10.7 |
| கம்பஹா | 20 | 5.0% | 90.5 | 3.9 | 4.2 |
| களுத்துறை | 11 | 9.1% | 86.8 | 3.8 | 9.3 |
| கண்டி | 15 | 6.7% | 74.4 | 11.2 | 13.9 |
| மாத்தளை | 6 | 16.7% | 80.8 | 9.8 | 9.2 |
| நுவரெலியா | 8 | 12.5% | 39.6 | 57.7 | 2.5 |
| காலி | 11 | 9.1% | 94.4 | 1.9 | 3.6 |
| மாத்தறை | 9 | 11.1% | 94.3 | 2.6 | 3.1 |
| அம்பாந்தோட்டை | 7 | 14.3% | 97.1 | 0.3 | 2.6 |
| யாழ்ப்பாணம் | 8 | 12.5% | 0.4 | 99.2 | 0.4 |
| கிளிநொச்சி | 2 | 50.0% | 1.2 | 98.2 | 0.6 |
| மன்னார் | 3 | 33.3% | 2.3 | 81.1 | 16.5 |
| வவுனியா | 3 | 33.3% | 10 | 83.1 | 6.8 |
| முல்லைத்தீவு | 3 | 33.3% | 9.7 | 88.3 | 2.1 |
| மட்டக்களப்பு | 6 | 16.7% | 1.3 | 72.7 | 25.4 |
| அம்பாறை | 7 | 14.3% | 38.9 | 17.4 | 43.4 |
| திருகோணமலை | 5 | 20.0% | 26.7 | 31 | 41.8 |
| குருநாகல் | 17 | 5.9% | 91.4 | 1.3 | 7.1 |
| புத்தளம் | 8 | 12.5% | 73.6 | 6.6 | 19.3 |
| அநுராதபுரம் | 11 | 9.1% | 91 | 0.6 | 8.2 |
| பொலன்னறுவை | 5 | 20.0% | 90.7 | 1.8 | 7.4 |
| பதுளை | 9 | 11.1% | 73 | 11.2 | 5.5 |
| மொனறாகலை | 7 | 14.3% | 94.9 | 2.9 | 2.1 |
| இரத்தினபுரி | 12 | 8.3% | 87.1 | 10.7 | 2.1 |
| கேகாலை | 9 | 11.1% | 85.5 | 7.3 | 7.1 |

ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட வேண்டிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை, அந்தந்த மாவட்டத்திலிருந்து ஒரு உறுப்பினரை தெரிவு செய்ய தேவையான சனத் தொகை சதவீதம் மற்றும் அந்தந்த மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு இனங்களின் சதவீதத்தையும் கணக்கிட்டு பார்த்தால் ஒவ்வொரு இனங்களிலிருந்தும் எத்தனை அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதை எவரும் கணக்கிட்டுக்கொள்ள முடியும்.

எல்லை நிர்ணய அறிக்கையுடன் இதனை ஒப்பிட்டால் (இதுபற்றி இக் கட்டுரையில் முன்னர் தெளிவுபடுத்தப்பட்டிருந்தது). வடக்கு மற்றும் கிழக்கைப் பொறுத்தவரையில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு எந்தவொரு அநீதியும் இழைக்கப்படவில்லை என்பது தெரியவரும். மன்னாரில் இடம்பெயர்ந்த முஸ்லிம் சமூகத்திற்கு அநீதி இழைக்கப்பட்டதாக எல்லை நிர்ணயக் குழு கருதியபோதும் சட்ட வரம்புகளை மீறி எல்லை நிர்ணயக் குழுவினால் எதுவும் செய்ய முடியாது போனது குறிப்பிடத்தக்கதாகும். இதுபற்றி அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேற்கூறியவாறு கணக்கிடும்போது களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, குருநாகல், அநுராதபுரம், பொலநறுவை மற்றும் மொனராகலை ஆகிய 8 மாவட்டங்களிலிருந்து ஒரு தமிழராவது தெரிவு செய்யப்படுவதற்கு தொகுதிகள் ஒதுக்குவதற்கான சாத்தியக்கூறுகள் மிகமிகக் குறைவு என்பதைக் காணலாம். (அட்டவணை A இல் காட்டப்பட்டுள்ளது).

இதேபோல் நுவரெலியா, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, முல்லைத்தீவு, வவுனியா, பொலநறுவை, பதுளை, மொனராகலை, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய 11 மாவட்டங்களிலிருந்து ஒரு முஸ்லிம் அங்கத்தவராவது தெரிவு செய்யப்படுவதற்கு தொகுதிகள் ஒதுக்குவதற்கான சாத்தியக்கூறுகள் மிகமிகக் குறைவு என்பதைக் காணலாம்.

சட்டத்தில் மேலும் கூறப்பட்டிருந்தது என்னவென்றால் "ஒரு நிர்வாக மாவட்டத்தின் ஏதேனும் பிரதேசத்தில், இன, மத அல்லது வேறு வகையான அக்கறைப் பிணைப்பினால் ஒன்று சேர்க்கப்பட்ட, ஆனால் அப்பிரதேசத்திலுள்ள பெரும்பான்மையினரான வாசிகளிலிருந்து ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இந்த அம்சங்களில் வேறுபடுகின்ற கணிசமான அளவினரான ஆட்கள் உள்ளனரெனக் குழுவுக்குத் தோன்றுமிடத்து, குழுவானது, அத்தகைய நிர்வாக மாவட்டங்களைத் தேர்தற்றொகுதிகளாகப் பிரிவிடலாம்."

இச் சட்டத்தை பயன்படுத்தி எல்லை நிர்ணயக் குழு பல தேர்தல் தொகுதிகளை உருவாக்கியது குறிப்பிடத்தக்கதாகும். இதுபற்றி பல விமர்சனங்கள் பாராளுமன்றத்தில், பாராளுமன்றத்தில் நடைபெற்ற கட்சிக் கூட்டங்களில், பத்திரிகைகளில் மற்றும் பொது மேடைகளில் எழுந்தன. அவற்றுள் சில: "கேகாலை மாவட்டத்தில் முஸ்லிம் சமூகத்தின் சனத்தொகை ஒரு உறுப்பினரை தெரிவு செய்வதற்கு போதாமல் இருந்தும் மாவன்னெல்லை பிரதேச செயலாளர் பிரிவைப் பிரித்து ஒரு தொகுதிக்குள் முஸ்லிம் சமூகத்தின் எண்ணிக்கை கூடியது ஏன்?"

"ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளைப் பிரித்து கஹவத்தை தொகுதி உருவாக்கப்பட்டது என்ன அரசியல் நோக்கத்திற்காக" , "தொகுதிகள் இன ரீதியாக பிரிக்கப்படுவதை எதிர்க்கிறோம்"

"பூஜாபிட்டிய இரண்டாகப் பிரிக்கப்பட்டுவிட்டது" போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

கஹவத்தை தொகுதி அவ்வாறு பிரித்து உருவாக்கப்பட்டதற்கான காரணம் அத்தொகுதியில் தமிழ் சமூகத்தின் எண்ணிக்கையை 31% ஆக அதிகரிப்பதற்கே. மற்றையது பூஜாபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவிலிருந்த முஸ்லிம் சமூகத்தை அக்குறணையுடன் சேர்த்து முஸ்லிம் சமூகம் தேர்தலில் வெல்லக்கூடியதாக ஒரு தொகுதி உருவாக்குவதற்கேயாகும். இவ்வாறு பிரிக்கப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்த்து சிறுபான்மையினம் வெல்லக்கூடியதாக பல தொகுதிகள் உருவாக்கப்பட்டன. இவ்வாறு எல்லை நிர்ணயக்குழு பதில் அளித்திருந்தது.

இதே முறையில் சிறுபான்மையினத்திற்கு கிடைக்க வேண்டிய தேவையான அளவு தொகுதிகளை உருவாக்க முடியாமல் போனதற்குக் காரணம் சட்டத்தில் கூறப்பட்ட இன்னுமொரு பகுதியாகும். அதில் கூறப்பட்டுள்ளது என்னவென்றால், "அத்தகைய பிரிவிடுகையைச் செய்வதில் ஆணைக்குழு, பின்வருவனவற்றைக் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்:-(i) மாகாணத்திற்குள்ளான நிர்வாக மாவட்டங்களின் பல்வேறு தேர்தல் தொகுதிகளில் வதிகின்ற ஆட்களின் எண்ணிக்கையிலான அளவொவ்வாமையை மிகக் குறைவானதாக்குவதன் விருப்புத்தன்மை; அத்துடன் (ii)தேர்தற்றொகுதிகளின் புவியியல் சார் மற்றும் பௌதீகச் சிறப்புக்கூறுகள்."

இதில் மீண்டும் வாக்கின் சமபலத்தை பேணுதல் வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இதனால் குழுவால் சிறிய சனத்தொகையைக் கொண்ட தொகுதிகளை உருவாக்க முடியாமல் போய்விட்டது. இருந்தும் சிறுபான்மைச் சமூகத்தை ஒன்றுசேர்த்து தொகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளதாக எல்லை நிர்ணயக்குழு பதில் அளித்திருந்தது. அவ்வாறு உருவாக்கப்பட்ட தொகுதிகளில் சிறுபான்மைச் சமூகம் தேர்தலில் வெற்றிபெறாவிட்டாலும் அச் சமூகம் ஒரு கட்சியின் வெற்றியைத் தீர்மானிக்கக் கூடிய சக்தியாக இருக்கும் என்பதே எல்லை நிர்ணயக் குழுவின் கருத்தாக இருந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6 பில்லியன்...

பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்ற இலக்கை நிர்ணயித்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடன்களை மீள செலுத்துவதற்காக 5 பில்லியன் டொலரும் வெளிநாட்டு ஒதுக்கத்தை வலுப்படுத்த ஒரு பில்லியன் அமெரிக்க டொலரும் இவ்வாறு தேவைப்படுவதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

ஒன்றிணைந்த வணிக சங்கம், ஔடத உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் வர்த்தக சம்மேளனம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் பிரதமர் குறித்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இந்த மாத இறுதியாகும்போது, சர்வதேச நாணய் நிதியத்துடனான பேச்சுவார்த்தையை நிறைவுசெய்யக் கூடியதாக இருக்கும் என்றும் பிரதமர் இதன்போது குறிப்பிட்டுள்ளார். (ம)

## வவுனியாவில்...

பாற்றியுள்ளது.

இதில் வவுனியா தேக்கவத்தை பகுதியைச் சேர்ந்த நதீச விதுசர (வயது-15) மற்றும் கைலாஸ் (வயது-16) என்ற இருவருமே உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,


வவுனியா ஈரப்பெரியகுளத்தில் நேற்றுப் பிற்பகல் குளிப்பதற்காக தேக்கவத்தை பகுதியைச் சேர்ந்த நால்வர் தமது வளர்ப்பு நாயையும் அழைத்துக்கொண்டு சென்றனர்.

எனினும் குளத்தில் குளித்து கொண்டிருந்தபோது நால்வரில் இருவர் அங்கு நீரில் மூழ்கினர். இதை அவதானித்த மற்றைய இருவரும் அவர்களை காப்பாற்ற முற்பட்டபோது அவர்களும் மூழ்கினர். இதையடுத்து அவர்கள் அழைத்து சென்ற வளர்ப்பு நாய் இருவரையும் காப்பாற்றி குளத்தின் கரைக்கு அழைத்து சென்றதாக அங்கிருந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

நீரில் மூழ்கிய இருவரையும் குளத்தில் தேடுதல் மேற்கொண்ட மக்கள், பொலிஸார் சுமார் 30 நிமிடங்களுக்கு பின்னர் நதீச விதுசர (வயது - 15) என்பவருடைய சடலத்தை மீட்டு வவுனியா பொது வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

எனினும் நீண்ட நேரமாகியும் கைலாஸ் என்ற 16 வயது சிறுவனை தொடர்ந்தும் தேடியபோது சுமார் ஒரு மணித்தியாலம் 30 நிமிடங்களுக்கு பின்னர் அவர் சடலமாக மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

மேலதிக விசாரணைகளை ஈரப் பெரியகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-250,299)



















## 35 பூச்சிக்...

35 பூச்சிக்கொல்லி மருந்துப் போத்தல்களை மீட்டுள்ளனர்.

இந்தியாவிலிருந்து இவற்றைக் கடத்தி வந்த நிலையில் கடற்படையினரைக் கண்டு கடத்தல்காரர்கள் பொதியினைக் கடலில் வீசி விட்டுத் தப்பிச் சென்றிருக்கலாம் எனக் கடற்படையினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் நெடுந்தீவுக் கடற்படையினர் மற்றும் நெடுந்தீவுப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-18,33)

## நாட்டின்...

வாசுதேவ நாணயக்கார இதனை தெரிவித்தார்.

அடுத்த வாரம் செவ்வாய் முதல் வெள்ளி வரை பாராளுமன்றம்நடைபெறும்என்றும், நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து மூன்று நாள் விவாதம் நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ம)

## நாட்டின் பேராப...

வர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சுதெச மற்றும் பாரம்பரிய வைத்தியர்களின் குழுவொன்று எதிர்க்கட்சித் தலைவரை நேற்று முன்தினம் கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்தித்து தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக நீண்டநேரம் கலந்துரையாடினர். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

“அரசு ஆட்சிக்கு வந்தவுடனேயே குபேரர்களுக்கு வழங்கப்பட்ட வரிச்சலுகையால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைய ஆரம்பித்தது.

இவ்வாறு வரிச்சலுகை பெற்ற செல்வந்தர்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு அது தொடர்பாக அதிசயமாகப் பேசினர்.

இன்று உண்மை வென்று வருகின்றது. உண்மையை [illegible] மக்கள் கஷ்டப்பட வேண்டியுள்ளமை துரதிர்ஷ்டவசமானது” என்றார். (ம)

## ‘துருக்கியே’...

துருக்கியர்கள் ஏற்கெனவே தங்கள் நாட்டை துருக்கியே என்று அறிந்திருக்கிறார்கள்.

துருக்கிய மக்களின் கலாசாரம், நாகரிகம் மற்றும் மதிப்புகளின் சிறந்த பிரதிநிதித்துவம் மற்றும் வெளிப்பாடாக துருக்கியே உள்ளதென அந்த நாட்டு ஜனாதிபதி ரிசெப்தையிப் எர்டோகான் கடந்த டிசம்பர் மாதம் தெரிவித்திருந்தார். (ம)

## திணைக்கள...

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியை தீர்க்கும் வகையிலான ஒரு நடவடிக்கையாக சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளினை அரசு அமுல்படுத்தி வருகிறது.

இதன் முதற்கட்டமாக திணைக்களமல்லாத அரச, கூட்டுத்தாபன, அதிகார சபைகளில் கடமையாற்றும் ஊழியர்களை சுயாதீன அடிப்படையில் ஓய்வுபெற வைக்கும் சுற்றுநிருபம் வெளியாகவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

55 வயதுக்கு குறைந்த நிரந்தர ஊழியர்கள் இந்த சுற்றுநிருபத்திற்கமைய சுயவிருப்பு அடிப்படையில் ஓய்வுபெற்று நஷ்டஈட்டை பெறலாம்.

இதன் அடுத்தகட்டம் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் சுயவிருப்பின் அடிப்படையில் ஓய்வுபெற சந்தர்ப்பம் வழங்கல் தொடர்பான சுற்றறிக்கை வெளியாகவுள்ளது. (ம)

## தலைவர்...

இலங்கையின் பொருளாதார நெருக்கடி தொடர்பில் வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைதியான வழிமுறைகளை தொடர்ந்தும் பின்பற்றுங்கள் -அர்த்தபூர்வமான மாற்றங்களிற்காக பொதுவான தமிழ் முன்னணியை உருவாக்குங்கள், பொருளாதார நெருக்கடி மற்றும் இனப்பிரச்சினைக்கு கூட்டுத்தீர்வுகளை காண்பதற்கு சிங்கள முஸ்லிம்கள் மத்தியில் உள்ள முற்போக்கான தரப்புகளை நோக்கி நேசக்கரங்களை நீட்டுங்கள் என்பதே இந்த தருணத்தில் தமிழ்த் தேசியவாத அரசியலிற்கான தனது ஆலோசனை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

**கேள்வி** - இலங்கை விவகாரத்தை உன்னிப்பாக அவதானிப்பவர் என்ற அடிப்படையில் ராஜபக்ஷ பரம்பரையின் எதிர்பாராத வீழ்ச்சி குறித்த உங்கள் கருத்து என்ன?

***பதில்*** - ராஜபக்ஷாக்களின் [illegible] அவதானிகளிற்கு ஆச்சரியத்தை அளித்துள்ளது. அவர்கள் மிகப்பெரும் பெரும்பான்மையை பெற்று மூன்று வருடங்களே ஆகின்றன.

அதிகாரத்தை ஒரே குடும்பத்திடம் அதிகளவு குவித்தமையும் பொருளாதாரத்தை திறமையற்ற விதத்தில் கையாண்டமையும் இந்த வீழ்ச்சிக்கு காரணம்.

**கேள்வி** - யுத்தத்திற்கு பிந்திய இலங்கை முடிவற்ற விதத்தில் நிச்சயமற்றதாக - ஸ்திரமற்றதாக காணப்படுகின்றது. 2015இல் இடம்பெற்ற ஆட்சி மாற்றம் இலங்கையில் ஜனநாயக கட்டமைப்புகள் மீண்டும் வலுப்படுத்தப்படும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது. எனினும் 2019இல் ராஜபக்ஷாக்கள் மீண்டும் அதிகாரத்திற்கு வந்தவுடன் அது முழுமையாக தோல்வியடைந்தது. நாடு தற்போது மீண்டும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இதனை எவ்வாறு பார்க்கின்றீர்கள்? இலங்கை ஏன் தொடர்ந்தும் அரசியல் ரீதியில் நோயுற்றதாக காணப்படுகின்றது?

***பதில்*** - பல தசாப்த கால நெருக்கடிகளிற்கு பின்னரும் சிங்கள பௌத்தர்கள் ஆதிக்கம் செலுத்தும் கொள்கையில் சிறுபான்மை தமிழர்கள், முஸ்லிம்களிற்கான சுயாட்சி என்ற விடயத்திற்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை.


அனைத்து மக்களிற்கும் ஏற்ற விதத்தில் இந்த விவகாரத்திற்கு தீர்வை காண வேண்டும் என இலங்கை பிடிவாதம் பிடிக்கின்றது.

இதற்கப்பால் சிங்கப்பூரின் லீ குவான் யூ அல்லது இந்தியாவின் நரேந்திரமோடி போன்றவர்கள் வழங்கிய தொலைநோக்குடன் கூடிய தலைமைத்துவத்தை வழங்கக்கூடிய தலைவர்கள் இலங்கைக்கு கிடைக்கவில்லை. ஸ்திரமான அபிவிருத்தியடையும் பொருளாதாரம் அனைவருக்கும் நன்மையளிக்கும் என்றார். (ம)
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## DCM - யாழ்.நகர்

வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை

**A/L 2024 கலை, வர்த்தகம்**

ஆரம்பம் : 5.6.2022 காலை 8.00 மணி

(11710)

அனுமதிகளை அலுவலகத்தில் பெறலாம். நிர்வாகம் : 077 011 9434


## சேவைகளுக்கு இடையூறு இல்லை

தொழில் திணைக்களத்தின் பிரதான மற்றும் மாவட்ட அலுவலகங்கள் வெள்ளிக் கிழமைகளில் மூடப்பட்டாலும் தொழில் திணைக்களத்தின் மூலம் வழங்கப்படும் சேவைகளுக்கு இடையூறு ஏற்படாது என தொழில் மற்றும் வெளிநாட்டு தொழில் வாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, ஊழியர் சேமலாப நிதிய பணிகளுக்கு இடையூறோ அல்லது தாமதமோ ஏற்படாதிருப்பதை தாங்கள் உறுதிப்படுத்துவதாக அந்த அமைச்சு அறிக்கை ஒன்றின் மூலம் குறிப்பிட்டுள்ளது. (ம)


## NEC

மணிக்கூட்டு வீதி, யாழ்.நகர்

**A/L 2024** கலை, வர்த்தகம், கணிதம், உயிரியல்

ஆரம்பம் : 03.06.2022

வெள்ளி காலை 9.00 மணி

(11702)

076 535 0999/ 076 166 1986

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 51 பரப்பு காணி விற்பனைக்கு**

- A9 வீதியிலிருந்து இரண்டாவது காணி 100 m தூரம்
- கைதடி வழி பிள்ளையார் கோயிலில் இருந்து 100 m தூரம்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- நன்னீரூற்று.
- கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் 300 m தூரம்
- மூன்று வழிப் பாதை மேட்டுநிலம்
- கைதடி சந்தி 500 m தூரம்
- 2 ½ பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்

**பார்வையிடும் நேரம்**

காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை

ஒரு பரப்பின் விலை - மூன்று இலட்சம்

தொடர்பு:- 077 623 4204, 077 288 0152, 076 436 5814

(11677)

## நாவலர் கல்வி நிலையம்

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.நகர்

**A/L 2024**

கலை, வர்த்தகப் பிரிவு

ஆரம்பம் : 03.06.2022

வெள்ளி காலை 9.00 மணி

(11701)

T.P - 076 166 1986

## A/L- 2024

கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்

DMI Jaffna

ஆரம்பம் : 5.6.2022

காலை 9

✆- 077 848 0604

(11668)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ( நிலப்பரப்பு )**

- A32, A9 இணையும் பிரதான வீதியில் ( றவுண்டப் வோட் )
- A9 பிரதான வீதியில் இருந்து 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.

தரகர் தேவையில்லை

(11723)

**பார்வையிடும் நேரம்**

காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை

077 814 7389, 077 241 7589 - ஜெயம்

## A/L 2024 கணக்கீடு

பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்

யாழ். நகரின் முன்னணி ஆசிரியர்

திரு.க.பா.பாலகஜன் (Tutorial staff)

B.com(Jaf),H.N.Dip-in ACC (ATF)

Dip in Ed(ousl), M.Com(Hons)Acc.spl

**KBK ACCOUNTING COLLEGE**

| சுவாமியார் வீதி கொழும்புத்துறை | பலாலி வீதி, கந்தர்மடம் |
|---|---|
| சனி, ஞாயிறு 2.00-3.00pm | செவ்வாய், வெள்ளி 5.30-7.00pm |
| 4.6.2022 சனி 2pm | 7.6.2022 செவ்வாய் 5.30pm |

(11455)

## IELTS

NEW BATCH ஆரம்பம்

Cont : 077 798 9830

By - B.Murali

Speaking & Grammar Class for Grade 7 தொடக்கம் 10 வரையான வகுப்புக்கள்.

இல.53, சிவகுருநாதர் வீதி, பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

(11668)

## TECHNO WORLD

TECHNO WORLD

தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

புதிய பிரிவு ஆரம்பம் **A/L 2024**

காலம் : 05.06.2022 | நேரம் : காலை 9.00 மணி

**பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் மாத்திரம் கொண்ட ஆசிரியர் குழாம்**

| | |
|---|---|
| தொழில்நுட்ப வியலுக்கான விஞ்ஞானம் | ராகவன் (B.Sc)<br>முருகநிரோஜன் (B.Sc)<br>நிறோஜன் (B.Sc)<br>அச்சுதன் (B.Sc) |
| பொறியியல் தொழில்நுட்பம் | அருண்குமார் (B.Tech Hons (Eng))<br>சிவஜன் (Lecturer)<br>நிசாந்தன் (HNDE) |
| உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் | திருக்குமரன் (B.Sc in Agri )<br>நிரோஜன் ( B.Sc in Agri)<br>சிவகுமார் (B. Sc in Agri ) |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் | உமாகாந்தன் (BIT)<br>நஜன் (B.Sc) |
| விவசாய விஞ்ஞானம் | சாரங்கன் (B.Sc in Agri )<br>திருக்குமரன் (B.Sc In Agri )<br>நிரோஜன் (B.Sc) |
| புவியியல் | S.S. கோகில் ( B.A, P.G.D.E, M.Ed) |
| ஊடகக் கற்கை | கஜிதரன் (B.A) |
| கணிதம் | மோகன்ராஜ் (B.Sc) |
| சித்திரம் | ஜெயந்தன் (B.A) |

தொடர்புகளுக்கு

077 017 5346

(C-4422)

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

யாருமே வழங்க முடியாத சலுகையை நாம் உங்களுக்கு வழங்குகின்றோம்.

BCHS

இதோ!

யாழ். நகர மாணவ செல்வங்களுக்கும் பெற்றோர்களுக்கும் ஓர் நற்செய்தி !!!

இன்றைய செய்தி நாளைய வரலாறு ஆகும். அதேபோல் உலகமொழியாம் ஆங்கில மொழி. இம்மொழியாற்றல் இல்லையேல் நாளை வரலாறு இல்லை எனலாம். அவ்வளவுக்கு இம் மொழிக்கு முக்கியத்துவம் உண்டு என்பதற்கு யாருமே மாற்று கருத்து கூறமுடியாது.

எனவே இம்முறையும் ஆங்கில பாடநெறியை சிறந்த வழிகாட்டி மூலம் உங்களுக்கு உணர்த்திட ....!!!

G.C.E (O/L) பரீட்சையின் பின் உங்கள் கனவை நனவாக்க நாம் தயார்!

Certificate of English Language (Beginners) (ஆரம்பபிரிவு) (Duration 03 Months) இப்பாட நெறிக்கான கட்டணம் 12,000 ரூபாய். ஆனால் கட்டணச்சலுகை உண்டு. இக்கட்டணத்தை முழுமையாக செலுத்தினால் வெறும் 10,000 ரூபாய் மட்டும். 2,000 ரூபாய் அனுமதி (Admission) கட்டணம் இலவசம்.

10,000 ரூபாய் மட்டுமே...!!)

Advance Certificate of English Language (Duration 06 Months) (Advance) (மேற்பிரிவு) வெளிநாட்டு வேலை வாய்ப்பு, உள்ளூர் வேலைவாய்ப்பு, வெளிநாட்டு மேற்படிப்புக்கான பாடநெறி ஆகும். கட்டணம் 14,000 ரூபாய். ஆனால் கட்டணக்கழிவு உண்டு. இக் கட்டணத்தை முழுமையாக செலுத்தினால் 12,000 ரூபாய். அனுமதிக் கட்டணம் இலவசம். இப்பாடநெறியின் நோக்கம் மாணவர்களின் ஆங்கில மொழி பேச்சாற்றலை உருவாக்குதல். (Spoken English)

12,000 ரூபாய் மட்டுமே...!!)

◈ அனைத்து பாடநெறி முடிவிலும் சான்றிதழ் வழங்கப்படும். எமது நிறுவனத்தில் பாடநெறிகளை பூர்த்தி செய்தவர்களுக்கு எமது நிறுவனத்தில் (IELTS) பாடநெறிக்கான அனுமதி கட்டணம் இலவசம்.

◈ காலம் தாழ்த்தாது உங்கள் பதிவுகளை எதிர்வரும் 05.06.2022 இற்கு முன் செய்து கொள்ளுதல் வேண்டும். எதிர்வரும் 09.06.2022 அன்று பாடநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. எனவே பதிவுகளை உடன் மேற்கொள்ளுங்கள்.

(11725)

BCHS

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

No.15, Sirambiyady Lane, Off Stanley Road, Jaffna.

Tel No - 021 222 4550

எமது கற்கைநெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு. ஒவ்வொரு பிரிவுக்கும் மிகச்சிறந்த விரிவுரையாளர்களை நியமித்துள்ளோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.